# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 10-6-62 | ஞாயிறு | இதழ் 52


'புதினம்' கருத்து:

## தமிழரசாரே, ஓடுங்கள், மலைநாட்டு தமிழரிடம்!

நாம் ஏற்கனவே சொல்லியிருந்தோம். 'தமிழரசாரே, மலைநாட்டுத் தமிழரிடம் போங்கள், போங்கள்!' என்று வலியுறுத்திக் கூறினேம்.

இதோ சந்தர்ப்பம் வந்துவிட்டது!

தோட்டங்களோடு தோட்டங்களாக வாழ்க்கை நடத்தும் மலைநாட்டுத் தமிழனுக்கு ஆபத்து வந்துவிட்டது!

இலங்கை அரசாங்கம் மலைநாட்டுத் தமிழனின் கழுத்திலேயே கத்தி வைக்கத் தீர்மானித்திருச்கிறது!

தேசிய மயப் பைத்தியம் பிடித்து, இந்த நாட்டையே குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கும் இந்தஅரசாங்கம், தோட்டத் தொழிலாளர்களையும் தேசியமயமாக்கப் போகிறதாம்!

இந்த நாட்டின் பொருளாதார வளத்தைப் பொறுத்த மட்டில் இந்த 'தேசியமயத் திட்டம்' எவ்வளவு படுமோசமான நிலையைக் கொண்டுவருமென்று நாம் விபரிப்பது வீண்வேலை.

ஏனென்ருல்—

தன்னுடைய மூக்கை அறுத்தேனும், தமிழனுக்குச் சகுனப் பிழை உண்டாக்கத் துணிந்து நிற்கிறது இந்த அரசரங்கம்.

ஆதலால்—

இந்த முட்டாள் தனத்திஞல், தோட்டத் தொழிலாளராகவே இந்த நாட்டில் வாழ்ந்து மடிந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு ஏற்படப் போகும் நிலையைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டில் தமிழ்மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபடும் தமிழரசுக் கட்சி, இப்போது என்ன செய்யப் போகிறது?

இன்றைய நிலையில் தங்கள் கட்சியின் பெயரால் மலைநாட்டில் தனித்துப் போராட்டம் நடாத்த தமிழரசாரால் முடியாது! இனிமேல் அந்தப்பகுதியில் கட்சியைப் பரப்பி ஆவன செய்வதற்குள், தோட்டத் தமிழன் வாழ்ந்த இடத்தில், தமிழையே காணமுடியாமல் போய்விடும்!

ஆகவே,

உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்!

தமிழரசுத் தந்தை இது குறித்துப் பத்திரிகைகளுக்கு காரசாரமான ஒரு நல்ல அறிக்கை விட்டிருக்கிருர்.

நல்ல ஆரம்பம்.

ஆனல், அவரே கூறியிருப்பதுபோல, வெறும் வாய்ப்பேச்சோடு இதை விட்டுவிடமுடியாது; ஏதாவதுசெய்துஆகவேண்டும்!


தமிழரசாரே, மலைநாட்டுத் தமிழர் மத்தியில் நீங்கள் புகுந்து கொள்வதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்!

அதுமட்டுமல்ல; உங்கள் இலட்சியத்தின் பாதையிலே இதுஒரு முக்கியமான கடமை!

என்ன செய்யப் போகிறீர்கள்?

இலங்கைத் தமிழகம்—ஏன், உலகத்தமிழகமே உங்களைப்பார்த்துக் கொண்டிருக்கிறது!





## 'பொலீஸ்' என்ற பயங்கரம்!

'பொலிசார்' என்ருல் யார்?

நம்மைப் பயமுறுத்துவதற்கென்று அமர்த்தப்பட்ட பிசாசுகளா?

எம்மைஅடக்கி ஆள்வதற்கென்றே உருவாக்கப்பட்ட தடியடி மல்லர்களா?

தவறு.

அவர்கள் பொதுமக்களின் பாதுகாவலர்கள். நீதியின் கட்டளைக்கு அடங்கி நடக்கும் சேவகர்கள்.

பொதுமக்களில் பலருக்கு இது தெரியாமலிருக்கலாம். போகட்டும்—

பொலீஸ் காரர்களுக்கே தெரியவில்லையே! பரிதாபம்!

பரிதாபம் மட்டுமல்ல; கேவலம்! பயங்கரம்!

சனநாயக நாட்டில் மக்கள் எல்லோருமே இந்நாட்டு மன்னர்கள்!

பாராளுமன்றப் பிரதிநிதிகள் அந்த மன்னர்களுக்கு மன்னர்கள்! மக்கள் தலைவர்கள்.

டாக்டர் நாகநாதன் இந்த மக்கள் தலைவர்களில் ஒருவர்.

யாழ்ப்பாணம்பொலீஸ் நிலையத்தில் இந்த மக்கள் தலைவரை, கேவலம் ஒரு பொலீஸ்காரன் மிருகத்தனமாகத் தாக்கியிருக்கிருன்!

டாக்டர் நாகநாதனை மட்டுமா!

அவரைத்தாக்கியதன் மூலம் அவரைப் பிரதிநிதியாகக் கொண்ட மக்களைத் தாக்கியிருக்கிருன்; தமிழ் மக்களையே தாக்கியிருக்கிருன்! ஏன், ஜனநாயகத்தைத் தாக்கியிருக்கிருன்; இந்த அரசாங்கத்தையே தாக்கியிருக்கிருனே!

பத்திரிகைச் செய்தி இப்படிக் கூறுகிறது.

தமது முகத்திலேயே அவமானக் கரியை அள்ளிப் பூசிவிட்ட அந்தப் பொலீஸ்காரனை உடனடியாக விசாரிக்கும்படி பிரதமர் உத்தரவிட்டிருப்பது போற்றத்தக்க செய்தி.

அது மட்டும் போதுமா?

விசாரணை ஏனோ தானோ என்று போய்விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமல்லவா?

அது மட்டும் போதுமா?

பொது மக்களை காப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட 'காவலர்கள்', அவர்களைப் பிய்த்துப் பிடுங்கும் பேய்களாக மாருமலிருப்பதற்கு வேண்டிய நிலைமையையும் உருவாக்க வேண்டுமல்லவா?

மக்கள் தலைவருக்கே இந்தக் கதியென்ருல்—

சாதாரண ஏழைப் பொது மக்களை இத்தகைய கொடும் பாவிகள் என்ன செய்வார்களோ! என்ன செய்வார்களோ!

---

**இந்த இதழோடு 'புதின'த்துக்கு**

ஓராண்டு நிறைவெய்துகிறது!

அடுத்த இதழ்—

**இரண்டாவது ஆண்டின்**

**தொடக்க இதழ் —**

**ஆண்டுச் சிறப்பிதழாக**

மலர்கிறது!

விலை—20 சதம் மட்டுமே!

## என்னசேதி?

### மந்திரிக்கு கறுப்புக்கொடி!

சென்றவாரம் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்த மந்திரி மகாநாம சமரவீராவுக்கு வல்வெட்டித்துறைப் பட்டினசபை வரவேற்பளித்தது. மந்திரியை மகிழ்விக்கும் நோக்கத்தை விரும்பாத பொது மக்கள் பலர் கறுப்புக்கொடிகளைக்கட்டித் தங்கள் மறுப்பைத் தெரிவித்தார்களென்றும், பொலிசாரும் ராணுவத்தினரும் அவைகளைக் கழற்றி வீசினரென்றும் தெரியவருகிறது.

### கந்தசாமி தினம்

சென்ற 5-6-62ல் கொழும்பு லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் கந்தசாமி நினைவு தினத்தைத் தொழிற் சங்கங்கள் கொண்டாடின. டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர்கெனமன், கொல்வின் முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள். உரிமைப்போராட்டத்தில் தனது உயிரைப் பலிகொடுத்த பெருமைக்குரியவர் திரு. கந்தசாமி.

### இலங்கைத் தொழிற்சாலை

பியகொடை என்ற இடத்தில் சுமார் ஐந்துகோடி ரூபா செலவில் அரசாங்கம் ஒரு நெசவுசாலையை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. சீனஅரசாங்கம் இந்த நெசவுசாலை அமைப்பதில் உதவி புரியும். 1966ல் இந்த நெசவுசாலை நிர்மாணிப்பு வேலைபூர்த்தியடையும்.

### 'கண்கள்'

அல்வை வள்ளுவர் கலைமன்றமாணவர் ஏடான கண்களின் முதல் இதழ் வெளிவந்துள்ளது திரு. சு. கணபதிப்பிள்ளை ஆசிரியராகக்கொண்ட இந்தக்கண்களில் கதைகள் கட்டுரைகள், கவிதைகள்யாவும் இடம்பெற்றுள்ளன. 'கேள்விபதில்' பகுதியில் கந்தமுருகேசனர் இனிப்பதில் அளிப்பாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பிரதி 25 சதம்.

### 'தந்தி'

யாழ்ப்பாணத்திலிருந்து புதிய வாரப் பத்திரிகை 'தந்தி' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. சுவையான செய்திகளுடன் கவர்ச்சிகரமாக வெளிவந்துள்ளது. 'தந்தி'யின் தனிப்பிரதி 10சதம் ஆசிரியர் ஜோ. ஏ. எம். தாஸ்.

# திரை மறைவில்

### மந்திரிகளின் புதுச் சிநேகிதங்கள்.

பாராளுமன்றத்தில் 'அடித்துப் பிடித்து'க் கொள்ளுகின்ற நம்முடைய பிரதிநிதிகளில் பலர் பாராளுமன்ற நாட்களில் அவர்கள் தேநீர் குடிக்கச்செல்லும் போது ஒருவர் தோளில் ஒருவர் கை போட்டபடி இனிக்க இனிக்கப் பேசிக்கொண்டு வருவதை அங்கு நடைபெறும் விஷயங்களை அவதானித்தவர்கள் அறிந்திருக்கக்கூடும். சென்ற சில வாரங்களாக தேநீர் பருகச் செல்லும்போது நமது மந்திரியான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும், 'கிழட்டுப் புலி'யான பிலிப் குணவர்த்தனவும் சேர்ந்துதான் செல்கிறார்கள். அதுமட்டுமல்ல, டட்லி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோருடன் கூட்டாகச் சேர்ந்தேதான் சி. பி. டி. சில்வாவும், மைத்திரிபால சேனநாயக்காவும் செல்கிறார்கள்.

வெறும் தேநீர்ச் சிநேகிதம் என்று சொல்லி இவற்றை ஒதுக்கிவிட முடியாது. இந்த நடவடிக்கைகளின் பின்னல் பலமான சில திட்டங்கள் இருக்கின்றன. இந்தப் புதுச் சினேகிதங்களுக்கெல்லாம் காரணம் மந்திரிசபையிலுள்ள கோஷ்டிப் பூசல்கள் தான். பீலிக்ஸ் கோஷ்டி, சி. பி. டி. சில்வா கோஷ்டி என்று இரண்டு கோஷ்டிகள் அரசாங்கக் கட்சிக்குள் இருப்பது தெரிந்ததே! சமீபத்தில் உருவான 'பத்திரிகை மசோதா'வோடு இந்தப்பிணக்கு உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டதாக நம்பப்படுகிறது.

சுருக்கமாகச் சொல்லப்போனல்,

'என்னை எதிர்த்தீர்களோ, உங்களை விரட்டிவிட்டு பிலிப்பை என்னேடு சேர்த்துச்கொள்ளுவேன்!' என்ற முறையில் பீலிக்ஸின் நடவடிக்கைகளும், 'ஏதாவது எக்கச்சக்கமாக நடந்துகொண்டால் உன்னை விட்டுவிட்டு டட்லியோடு சேர்ந்து உன்னை ஒருகை பார்த்துவிடுவோம்' என்ற முறையில் சி. பி. டி. சில்வாவின் கோஷ்டியின் நடவடிக்கைகளும் இருக்கின்றன.

ஆனல் 'அதிபுத்திசாலி'களான பதியுதீன் முகமத்தும், சாம். பி. சி. பர்னன்டோவும் இந்தக் கோஷ்டிகள் ஒன்றிலும் சிக்கிக்கொள்ளாமல் தங்களையும் தங்களது சுற்றத்தையும் 'முன்னேற்று'வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறார்கள்!

### உதவி வித்தியாதிபதிகள் நியமன முறைகேடுகள்!

கல்வி இலாகாவில் புதிதாகச் சில உதவி வித்தியாதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது சில குறிப்பிட்ட தராதரங்களைக் காட்டி அவற்றையுடையோர் யார்வேண்டுமானலும் விண்ணப்பிக்கலாம் என்ற முறையில்தான் விளம்பரம் செய்யப்பட்டது. எனவே சில பெருத்த கல்விமான்களும், அனுபவமும் ஆற்றலும் மிக்க கல்லூரி அதிபர்கள் சிலரும் இந்தப் பதவிக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனல் வெளியிலிருந்து யாரையும் எடுக்காமல் கல்வி இலாகாவில் பணியாற்றியவர்களையே இந்தப் பதவிக்குத் தெரிவு செய்திருக்கிறது அரசாங்கம். அதுவும்கூட நேர்மையான முறையில் நடத்தப்படவில்லை. கல்வி இலாகாவில் பணியாற்றியவரும் அனுபவமும் ஆற்றலும் மிக்கோரைப் புறக்கணித்துவிட்டு ஒருசில 'இளசு'களையே இந்தப் பதவிக்கு நியமித்திருக்கிறது அரசாங்கம்.

இந்த 'இளசு'களுக்கு இப்பதவி கிடைத்ததன் காரணம் என்ன தெரியுமா?—காக்கா பிடிக்கும் கலையை இவர்கள் பூரணமாகக் கற்றிருந்ததுதான்!

### தொழிலாளர்களே ஒன்று திரளுங்கள்

'அரசாங்க லிகிதர் சேவைச் சங்'கத்தினர் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தங்கள் சங்கத்துக்கு ஒரு கட்டிடம் கட்ட முயன்று வந்தார்கள். இதற்காக எத்தனையோ மந்திரிகளிடம் 'காவடி' தூக்கிக்கொண்டு சென்றார்கள்.

இந்தச் சங்கம் சமசமாஜிகளின் ஆதிக்கத்தில் இருப்பது. இந்தச் சங்கத்தால் யூ. என். பி. க்கு எத்தனையோ தொல்லைகள் உண்டு. இருந்தாலும் இந்த வித்தியாசங்களையெல்லாம் பாராது இந்தச் சங்கத்துக்குரிய கட்டிடத்தைக் கட்டுவதற்கான இடத்தை திரு. டி. எஸ். சேனநாயக்கா பிரதமராக இருந்த போது ஒதுக்கிக் கொடுத்தார். அதுமட்டுமன்றி யூ. என். பி. அரசாங்கம் பதவியிலிருந்தபோதுதான் இச் சங்கம் கேட்டுக்கொண்ட கடன் தொகையான 7 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

சென்ற வருடத்தில் 'விதவை'ப் பிரதமரான நமது சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்திவாரமிட இக்கட்டிட வேலைகள் ஆரம்பமாயின. 'மின்னல் வேகம்' என்கிறார்களே, அந்தவேகத்தில் இங்குவேலைகள் நடைபெற்று வந்தன. மிகவும் நாகரிகமான முறையில் பல மாடிகள்கொண்டதாக இக் கட்டிடம் உருப்பெறத்தொடங்கியது. பாதிக்குமேல் வேலைகள் முடிவடைந்தும் விட்டன.

இந்த நேரத்தில்தான் நம்முடைய பீலிக்ஸின் கொள்ளிக்கண் இக் கட்டிடத்தின்மீது பட்டது. அதன்பயனக இப்போது 'இந்தக் கட்டிடத்தை அரசாங்கமே எடுத்துக்கொள்ளுமெனவும், இக்கட்டிடத்தில் உள்ள இடம் மற்றைய தொழிற்சங்கங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் என்றும்' திறைசேரி அறிவித்திருக்கிறது.

மற்றைய தொழிற்சங்கங்களுக்கும் இந்த கட்டிடத்தில் 'இடவசதி அளிக்கப்படும்' என்ற ஆசை வார்த்தைகளைக் கேட்டு மற்றைய தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் இந்த அநியாய நடவடிக்கையைக் கண்டிக்காமல் இருந்து விடுமோ எனப் பயந்து கொண்டிருந்தேன். நல்லவேளை—ஆசைவார்த்தைகளுக்கு மயங்காமல் பெரும்பாலான தொழிற் சங்கங்கள் இந்த நடவடிக்கையைக் கண்டித்திருக்கின்றன. அதுமட்டுமல்ல பல அரசாங்கக் கட்சி எம். பி.க்களும் தங்களது கண்டனத்தை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்கள்.

'தொழிலாளர்களுக்காக வாழுவதாகக் கூறும் இந்த அரசாங்கத்திலா இந்த அநியாயம்?—அட, கடவுளே!'

### பொன் மொழி

"ஜனநாயக லட்சியத்தை அடைவதற்காக ஆசிய நாடுகள் பல வேகமான பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றன. ஜனநாயகத்தை அடைவதற்கான இந்த அவசரம் பல சமயங்களில் சர்வாதிகாரத்திலும் மோசமாகவே அமைந்து விடுகிறது. ஜனநாயக லட்சியத்தை அடைந்துவிட வேண்டுமென அவசரப்படுகிறவர்கள் பல சமயங்களில் ஜனநாயக அடிப்படைகளையே தூக்கி எறிந்துவிடத் துணிந்துவிடுகிறார்கள்"—யாரோ.


உங்கள் துணிகள்

வெண்மையாகவும்

பிரகாசமாகவும் விளங்க

**யாழ் சோப்**


உபயோகியுங்கள்.

**யாழ் சோப்**

தரத்தில் சிறந்தது.

அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு பல மடங்கு லாபம் கிடைக்கிறது.

# “அரசியல் வாதிக்கு இல்லாத மன நிம்மதி எழுத்தாளனுக்கு உண்டு!”



மட்டக்களப்பில் இரண்டு ‘துரை’கள் வாழ்கின்றனர். ஒருவர் மக்கள் திலகம், மற்றவர் எழுத்துத் திலகம். இருவரும் இரண்டுதுருவங்கள். ஆயினும் இருவருமே மட்டக்களப்பு மண்ணுக்குப் புகழ் தேடித் தருபவர்கள். மக்கள் திலகம் இராசதுரை இலக்கியத்திலிருந்து அரசியலில் புகுந்து பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற மட்டக்களப்பு மக்களின்—ஏன் இலங்கைத் தமிழ் மக்களின் பேரபிமானத்தைப்பெற்றவர். எழுத்துத்திலகம் பொன்னுத்துரை, அரசியலிலிருந்துஇலக்கியத்தில் புகுந்து புதுப்புதுப் பரிசோதனைகள் நடாத்தி ஈழத்து எழுத்துலகிலேயே ஒரு குறிப்பிடத்தக்க புள்ளியாக விளங்கி வருபவர். தமக்குப் பின்னால் ஒரு எழுத்தாளபரம்பரையையே சிருட்டிக்க முயல்பவர்.

இந்த இருவரும் நீண்ட காலத்துக்குப் பிறகு — 1956-ம்

## மட்டக்களப்பு முஸ்லிம் எழுத்தாளர் கூட்டத்தில் இராசதுரையும், பொன்னுத்துரையும்.

ஆண்டுக்குப் பிறகு ஒரே கூட்டத்தில் சந்தித்து ஓரேமேடையில் சென்றவாரம் பேசினார்கள்.

இலங்கை எழுத்தாளர்கள் பொதுவாக இலக்கியத் துறையில் கோஷ்டிகளாகப் பிரிந்து ஒருவரையொருவர் இருட்டடிப்புச் செய்வதிலும், முதுகு சொறிவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்று எடுத்துக்கூறியதோடு. அரசியல் வேறுபாடுகளை விடுத்து எழுத்தாளர் ஒருமுகப்பட்டு செயலாற்ற வேண்டுமென்பதையும் அகில இலங்கை ரீதியில் எழுத்தாளர்களை ஒன்று திரட்டும் ஒரு ஸ்தாபனமொன்றை நிறுவ வேண்டுமென்பதையும் இருவரும் ஒரேமுகமாக ஆதரித்துப்பேசினர்,

**திரு. இராசதுரை:**

“நான் இந்தக் கூட்டத்தில் எழுத்தாளனாகவே கலந்து கொள்கிறேன். எழுத்தாளனாக இருந்போது எனக்கிருந்த மன நிம்மதி இப்பொழுது அரசியலில் புகுந்து பாராளுமன்ற உறுப்பினராக வந்த பின்னர் கிடைக்கவில்லை.

எழுத்தாளர்களாகிய நீங்கள் பாக்கியவான்கள், மனநிறைவோடு வாழுகிறீர்கள்.

**திரு. பொன்னுத்துரை:**

நாங்கள் இருவரும் இருவேறு துறைகளாயினும் எங்களுக்குள் ஒற்றுமையில்லாமலுமில்லை, அவரும் துரை, நானும் துரை. அவரும் ஒரு தொழிலாளியின் மகன்; நானும் ஒரு தொழிலாளியின் மகன், அவரும் சமுதாயத்தில் மறுமலர்ச்சிகாண முற்படுபவர். நானும் அவ்வாறே. ஆனால் அவர் இலக்கியத்திலிருந்து அரசியலில் புகுந்து துன்பத்துடன் பேசினார். நான் அரசியலில் இருந்து இலக்கியத்தில் புகுந்து மனநிறைவோடு பேசுகிறேன்.”



இம் மாநாட்டில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து எழுத்தாளர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கொழும்பிலிருந்து பிரதமபேச்சாளர்களாகவித்தியாதரிசி ஜனாப் – முகமது சமீம் கொழும்பு இலக்கிய இரசிகர் குழுச் செயலாளர் எம். எம். றகுமான், அக்கரைப்-பற்று அப்துஸ்சமது, பொத்துவில் எம். ஏ. கபூர். (யுவன்) ஈழமேகம் எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி மருதமுனை வித்தியாதரிசி ஏ. எம் சரீபுதீன் ஏறாவூர். யூ. எல் தாவூத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### பார்ப்பதற்கு என்ன இருக்கிறது?

ஒருநாள் மாலை ஜன்ஸ்டீன் கைகளில் பெரிய மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டும், புகைக் குழாயை வாயில் கவ்விப் பிடித்துக் கொண்டும், நியூயோர்க் நகரத்துத் தெருவொன்றின் வழியாக வந்துகொண்டிருந்தார். ஆனால், அந்த மகாமேதையைத் தெருவில் போவோர் வருவோர் யாரும் இனங் கண்டு கொள்ளவில்லை. ஆனால் ஜன்ஸ்டீனை இனங் கண்டுகொண்ட பத்திரிகை நிருபர் ஒருவர் அவரை அணுகி, மிகுந்த வருத்தத்தோடு “உங்களை ஒருவருமே தெரிந்து கொள்ளவில்லைப்பார்த்தீர்களா? உங்களை யாருமே அடையாளம் கண்டு கொள்ளாமல் போவதைக்கண்டுஉங்களுக்கே ஆச்சரியமாயில்லையா? இப்போது இங்கே ‘லானடர்னர்’ மட்டும் வந்திருந்தால் அவளைப் பார்க்க ஆயிரம் பேர் வந்து கூடியிருப்பார்களே!” என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

அதைக் கேட்டவுடன் “உண்மைதான்! பார்ப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது?” என்று அமைதியாகப் பதில் சொன்னார் ஐன்ஸ்டீன்!

---

‘இலங்கைத் தமிழ்த் தலைவர்களெல்லாம் வெறும் போலிகள். நானே உண்மையான தலைவன்! தமிழர் பிரச்சினையை ஐ. நா. வுக்கே கொண்டு செல்லப் போகிறேன்’ என்கிறார் இவர்!

### இன்னுமொரு ஏமாற்றுப் பேர்வழி

# யார், இந்த வைத்திலிங்கம்?

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களின் தலைவர்களை அறியாத சிறு குழந்தைகூட இலங்கையிலும்சரி தமிழகத்திலும்சரி இருக்க முடியாது. ஆனால் இந்தத் தலைவர்களெல்லாம் வெறும் போலிகள் என்றும், தானேதான் உண்மையான தலைவன் என்றும், இலங்கைத்தமிழரது பிரச்சினையை ஐ.நா. வுக்குத் தான் கொண்டு செல்லப் போவதாகவும் கூறித் திரிகிறாராம் ஒருநபர்.

அவர்பெயர் எஸ். வைத்திலிங்கம் என்று சொல்லப்படுகிறது. நல்லவாட்ட சாட்டமானஉடற்கட்டு, வழுக்கை விழுந்த தலை, பார்வைக்கு ரொம்பப் படித்தவர் போல் தோன்றும் இவர், தான் ஒரு நாட்டின் பிரதமர் என்று கூறினாலும் மற்றவர்கள் நம்பிவிடுமளவுக்குப் பேச்சுவன்மையும் கவர்ச்சியும் மிக்கவராம்.

இத்தியாதி லட்சணங்கள் கொண்ட ஒருவர் தமிழர் பிரச்சினையில் அக்கறைகொள்ளக்கூடாதா என்று ஒருவர் கேட்கலாம். ஏன் கூடாது? தமிழனாகப்பிறந்த ஒவ்வொருவருக்குமே அந்த உரிமை இருக்கிறது.

ஆனால்—

இந்த மனிதர்! பத்திரிகை நிருபர்களின் காலைக்கையைப் பிடித்தது ஏதாவது அறிக்கைகளைப்பத்திரிகைகளில் பிரசுரம் செய்துவிட்டு அந்தப்பத்திரிகைகளுடன் பெரிய பெரிய வார்த்தகர்களிடம் சென்று தனது பேச்சுச்சாதுர்யத்தினால் பணம் வசூல் செய்துகொண்டு சென்றுவிடுகிறார் என்று ‘புதினத்’ துக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

இவரது கட்டுரை ஒன்றை இலங்கையிலுள்ள ஆங்கிலத் தினசரி ஒன்று சமீபத்தில் பிரசுரித்திருந்தது. அதே நேரத்தில் இந்தியாவில் உள்ள சில தமிழ்ப் பத்திரிகைகளும் இவரது அறிக்கைகளைப் பிரமாதமாகப் பிரசுரித்தன.

இந்த நவீன விக்கிரமாதித்தன் ஆறு மாதம் இலங்கையிலும் ஆறுமாதம் இந்தியாவிலும்சஞ்சாரம் செய்துவருகிறாராம். ஒருகாலத்தில் இவர் யூ. என். பி. யின் வாலாக இருந்தவரென்றும் தமிழரது தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்க தமிழரசுக்கட்சி கையாளும் வழிவகைகள் நடைமுறைக்கு ஒவ்வாதன என்று இவர் இந்தியாவில் பிரச்சாரம் செய்து வருகிறாரென்றும் தெரிகிறது.

இவரிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்தவர்களின் பட்டியல் அதிகரித்துக் கொண்டு வருவதால் என்றோ ஒருநாள் இவர் ஆபத்தில் மாட்டிக் கொள்ளக் கூடும்.

### கெட்டிக்கார ஆணும் பெண்ணும்

தன்மனைவி செலவழிப்பதைக் காட்டிலும் அதிகமாகச் சம்பாதிக்கக் கூடியவனே கெட்டிக்கார ஆண்.

அப்படிப்பட்ட ஆணைத்தேடிக் கல்யாணம் செய்துகொள்பவளே கெட்டிக்காரப் பெண்!

## சோடாக் கலைஞர்.

பழைய நடிகர்களைப்பற்றி ஒரு ஹாஸ்ய நடிகர் சொன்ன கதை இது. "அந்தக் காலத்தில் சோடா அருமையாக இருந்தது. முக்கிய கதாநாயகன் கதாநாயகிகளுக்குத்தான் அதை வழங்குவார்கள். உப நடிகர்கள் ஆசைப்பட்டாலும் அதைக் கொடுக்கமாட்டார்கள். ஒரு நாள் எங்கள் கம்பெனி கோவலன் நாடகம் நடாத்திக்கொண்டிருந்தது. கோவலன் வெட்டுண்டு விட்டான். கண்ணகி காளிவேஷம் பூண்டுவரவேண்டிய காட்சி; காளி வேஷத்திற்காக ஒரு உப நடிகர் அமர்த்தப்பட்டிருந்தார். அவருக்குஅப்போதுதான் சோடாக் குடிக்க ஆசையாய் இருந்தது. அவர் களவாக ஒன்றை எடுத்து சத்தம் கேட்காமல் திறந்து குடித்துக்கொண்டிருந்தார். அதற்கிடையில் நாடக மனேஜர் காளி, காளி என்று கூப்பிடத் தொடங்கி விட்டார். அரைவாசி குடித்துக் கொண்டிருந்த காளி வேஷம். அதில் கலைஞர் சரவணமுத்து அவர்களைப் பற்றி, அவரோடு நாற்பது வருடமாகத் தொடர்பு கொண்ட கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் ஒரு அருமையான கட்டுரை எழுதியுள்ளார்; அதில் ஒரு கலைஞனுக்கு வேண்டிய 1. அடக்கம் 2. தற்புகழ்ச்சியின்மை 3. ஒத்திகைக்கு ஒழுங்காக வருதல் 4, சுய சிந்தனையால் நடிப்புக்கு மெருகேற்றல் 5, எதிர் நடிப்பு 6. குருபக்தி என்ற விடயங்களில் சரவணமுத்து மேம்பட்டு இருந்தார் என்பதை விளக்கியுள்ளார். ஒரு பெண், பெண் வேடந்தாங்கி நடிப்பது அவ்வளவு கெட்டிக்காரத்தனமல்ல. ஓர் ஆண் பெண் வேடம் தாங்கி நடிப்பதுதான் உண்மையான கலை என்பதை அவர் விளக்கிவிட்டு சரவணமுத்து சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை விபரித்துள்ளார்.

### தகப்பனார் அழுதார்

"சரவணமுத்துவின் தோற்றத்தில் பெண் அம்சங்களே முன் என்பதனால் அல்ல, சரவணமுத்துவின் தாயார் இளமையில் காலமாகிவிட்டார். சரவணமுத்துவின் கைகேகி நடிப்புப்படம் அவர்தாயின் சாயலாக இருந்ததே தந்தையின் கண்ணீருக்குக்காரணம்"

### எழுத்தாளன் யார்?

சமீபத்தில் நடந்த அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமைவகித்த பேராசிரியர் சீனிவாசராகவன் எழுத்தாளனது இலக்கணத்தை எழில்பட விரித்துரைத்தார். "தன்னம்பிக்கை, உறுதி, இவை இல்லாவிடில் ஒருவன் எழுத்தாளனாக முடியாது. மற்றவர்களை உற்று நோக்கும் போது மென்மையும், பண்பும். அடக்கமும் கண்டுணர்ந்து அதை ஒருபடைப்பாக்கி எழுத்துலகிற்கு அளிப்பவனே எழுத்தாளன்" என்றார். அந்த எழுத்தாளர்மகாநாட்டின் 'கருத்தரங்கத்தில் கலைமகள் ஆசிரியர் கி. வ. ஜெகந்நாதன், "ஒரு எழுத்தாளன். தான் எழுதப்புகும் பொருளைப்பற்றிக் கனவு கண்டு, அதன் இன்பத்திலே திளைத்து எழுத்துலகிற்கு ஒரு படைப்பை உண்டுபண்ணினால் அது பயனளிக்கக் கூடியதாயிருக்கும்" என்று கூறிவிட்டு, கண்டவற்றை ஒதுக்கிக் காணுதவற்றைக் காணமுயன்று கண்டது பழமை—காணாதது புதுமை என்பதை எழுத்தாளர்கள் உணரவேண்டும். உலகத்தையும் உள்ளத்தையும் படித்து எழுத வேண்டும் என்று அறிவுரை கூறினர், இப்படியெல்லாம் எழுத்தாளர் மகாநாட்டில் நிகழ்ச்சிகளைத் திரட்டி எழுதியுள்ளதென்றால் எழுத்தாளர் அமைப்புகள் ஒன்றை ஒன்று ஒப்புக்கொள்ளாமல் பகைத்துநிற்கும் காரணத்தையும் எழுதியிருக்கிறது. அது இதுதான். "எழுத்தாளர் என்பவர்களில் நூற்றுக்கு எண்பதுபேர் மிகுந்த தன்னம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். இது மிகவும் மகிழத்தக்க செய்திதான். ஆனால் இந்தத் தன்னம்பிக்கை 'தலைக்கனம்' ஆக விசுவரூபம் எடுப்பதுதான் இதிலுள்ள தொல்லை .... ஒரு எழுத்தாளன் அவ்வளவு சுலபத்தில் மற்றொரு எழுத்தாளனை அங்கீகரித்து விடுவதில்லை. தனிமனிதர்களிடத்திலே உள்ள இந்தக் குறை, அந்தமனிதர்கள் ஸ்தாபனமாக ஒன்று சேரும்போதும் எப்படியோ தொற்றிக் கொண்டுவிடுகிறது"

## உங்கள் காலபலன்

### இந்தவாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

10-6 62 முதல் 16-6-62 வரை

மேடம்: புதிய முயற்சிகளில் தொடர்ந்து முன்னேற்றங்காணப்படுகின்றது, பொருள் லாபமும் கிட்டும். எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேறுவது எளிதாக இருக்கும். வாரத்தின் கடைசி நாள் மட்டும் சில சங்கடங்களை உண்டாக்கலாம்.

இடபம்: தொழில் விஷயங்களில் இந்த வாரத்திலும் தொடர்ந்து முன்னேற்றங் காணப்படுகின்றது. ஆனால் பிரயாசமதிகமாக இருக்கும். மனதில் அமைதி நிலவாது. உறவினருடன் விரோதமும் கோட் சொல்லுபவர்களால் கலகங்களும் ஏற்படும்.

மிதுனம்: எதிர்ப்புகளைச் சமாளித்துக்கருமங்களில்வெற்றியீட்ட முடியும். பொருள் லாபமும் கிட்டும். கல்வி விஷயங்களிலும் முன்னேற்றமுண்டு. ஆனால் உறவினரால் சங்கடங்கள் சில ஏற்படும்.

கடகம்: தேகசுகம் பாதிக்கப்படும். குடும்பத்திலுள்ளவர்களுக்கும் சிறு சுகவீனங்கள் காணப்படுகின்றன. ஆனால் தொழிலில் மட்டும் சிறு முன்னேற்றமுண்டு.

சிங்கம்: உபயோகமான சில சிநேகிதங்களை இவ்வாரத்தில் தேடிக்கொள்வீர்கள். பொருள் லாபமும் கிட்டும். ஆனால் சிறு விபத்துக்களுக்கிடமுண்டு. தேக சுகமும் சிறிது பாதிக்கப்படும்.

கன்னி: நண்பர்களுடனும் உறவினர்களுடனும் விரோதங்கள் காணப்படுகின்றன. மனதிலும் அமைதி நிலவாது. நீங்கள் எல்லா விஷயங்களிலும் அதிகம் அவதானமாக நடக்க நேரிடும்.

துலாம்: தொழில் விஷயங்களில் லாபகரமான முன்னேற்றங்கள் காணப்படுகிறது. ஆனால் குடும்பச் சூழ்நிலைகள் இன்னுஞ் சிக்கலாகவே இருக்கும். விரோதங்களும் தப்பபிப்பிராயங்களும் ஏற்படும். தேகசுகமும் பாதிக்கப்படும்.

விருச்சிகம்: அதிக பிரயாசையின்றிக் கருமங்களில் வெற்றி கிட்டும். எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற முடியும். ஆனால் தேக சுகம் பாதிக்கப்படும்.

தனுசு: குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் சில நீங்கும். அதிக பிரயாசத்தின் பின் காரியங்கள் சித்தியாகும். ஆனால் தேகசுகம் மட்டும் தொடர்ந்து பாதிக்கப்படும்.

மகரம்: உங்கள் கருமங்களில் சில எதிர்ப்புகள் ஏற்படும். வாரத்தின் முதல் நாளை அவதானமாகக் கழிக்கவும். தேக சுகம் பாதிக்கப்படும். ஆனால் பொருள் விருத்தியுண்டு.

கும்பம்: குடும்பச் சூழ்நிலைகள் அதிகம் சுமுகமாக இராது. திங்கள் செவ்வாய்க்கிழமைகளையும், புதன் காலையையும் அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்கள் தொழிலுக்குச் சாதகமாக அமைந்துள்ளன.

மீனம்: பூமியால் லாபமுண்டு. நண்பர்கள் மூலமாகப் பல வித உதவியுண்டு. ஆனால் தேகசுகம் இன்னும் திருப்திகரமாக இருக்காது. புதன் பிற்பகலையும், வியாழன் வெள்ளி வாரங்களையும் அவதானமாகக் கழிக்கவும்.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்தவூர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒருவருட காலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும்.இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226,காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

## 'பூதந்தேவனார்' அரங்கு

நடிகர் ஓடோடி வந்து 'பழிக்குப்பழி கொடடா பழிகாரப்பாண்டியனே' என்று உக்கிரமாகப் பாடத் தொடங்கி விட்டார். பழிக்குப்பழி கொடடா......என்றதுதான் தாமதம் உள்ளேபோன சோடா 'ஏவ்' என புரைக்கடிக்கத் தொடங்கி விட்டது. ஆனால் பார்த்த பொது மக்களும் மனேஜரும் காளிஅப்படி உறுமுவதாகத்தான் நினைத்தார்கள், கைதட்டினார்கள். அன்றைய 'காளி' நடிகரின் நடிப்பைப் புகழ்ந்தார்கள். ஆனால் அது சோடா செய்த வேலையென்று அவர் ஒருவருக்குத்தான் தெரியும். அதனால் என்ன? அதன் பிறகு அந்த உப நடிகர் முக்கிய நடிகர் பட்டியலில்இடம் பெற்றுவிட்டார்"

### கலைஞர் சரவணமுத்து

யாழ்ப்பாணத்துக் கலைஞர் வரிசையில் பெண்பாகம் தாங்கி நடிப்பதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத புகழைப் பெற்றிருந்தவர் தையல் நாயகி அச்சக மனேஜர் சரவணமுத்து அவர்கள். அவரது நினைவாகச் சமீபத்தில் வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரியில் ஒரு மாபெரும் கூட்டம் நடந்தது. அவரிடம் நடிப்புப் பயிற்சி பெற்ற மாணவர்கள் கூட்டத்தையும் ஒழுங்கு செய்து நாடகமும் நடத்திக் காட்டினர். எல்லாவற்றுக்கும் மேலாக சரவணமுத்து ஞாபக மலர் ஒன்றையும் நன்கு வெளியிட்டு இலவசமாக வழங்கினார்கள். போற்றப்படவேண்டிய விஷயம். பொருந்தியிருந்தன. ஒரு நாள் சரவணமுத்துவைத் தனியாக அழைத்து, "நீ பெண்பாகங்களில் நடிப்பாயானால் உனக்குசுடிலாப் புகழ் கிடைக்கும். அடுத்த நாடகமாகிய பாதுகா பட்டாபிஷேகத்தில் கைகேயியாக நடிக்க வேண்டும்" என்றேன்...... "உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள், ஆனால் இது விஷயம் தந்தையார் அறியாது இருக்க வேண்டும்" என்றார் அவர். ஒத்திகை முடிந்து நாடகம் அரங்கேற்றப்பட்டது. திரை இழுபட்டது. அவரைக் கண்டதும் மண்டபத்தில் இருந்த யாவரும் ஒன்றுகச் சேர்ந்து வெகுநேரம் கரகோஷம் செய்தார்கள்........ அத்தனை அழகிய ரூபத்தை முன்னெருபோதும் எவரும் மேடையில் கண்டதேயில்லை ......முதலில் இராமனுக்குப் பட்டம் என்று அறிந்ததும் ஏற்பட்ட சந்தோஷம், கூனி அதைத் தடுத்து விடவேண்டுமென்ற போது ஏற்பட்ட கோபம், கூனியின் சூழ்ச்சியில் மயங்கித் தன் மகனையும் தன்னையும் புறக்கணித்ததில் ஏற்பட்ட ஆத்திரம், இவற்றை அவர் தன் முகபாவத்தினாலும் நடிப்பினாலும் தத்ரூபமாகச் செய்து காட்டினார். ஜனங்கள் பிரமித்து விட்டார்கள். ஆங்கிலப் பத்திரிகைகள் வெகுவாகப் புகழ்ந்து எழுதி, எங்கள் படங்களையும் வெளியிட்டன; அந்தப் படங்கள் சரவணமுத்துவின் தந்தையார் கையிலும் அகப்பட்டுவிட்டது. அதைக் கண்டதும் அவர் கண்ணீர் விட்டுக் கதறினார், தன் மகன் பெண்பாகம் தாங்கி நடிக்கி

### அமரர் கல்கி

இப்படி எழுத்தாளர் மகாநாடுகள் இங்கும் அங்கும் 'பிச்சுப்பிடுங்கி' நடைபெறும் போது தான் எல்லோரையும் அரவணைத்து நடந்த கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியின் நினைவு எனக்குஏற்படுகிறது. எவ்வளவு திறமைசாலி என்று எண்ணத் தோன்றுகிறது. கவிஞர் ஆறுமுகன் பாடிய பாடல் ஞாபகத்தில் மிதக்கிறது.

பிறப்பவர் உலகையோர்நாள் பிரிபவர்' மெய்தான் ஆனால்
இறப்பிற்கும் பின்னே, வாழ்வோர்
இதயத்தில் ஒளி போல் வாழும்
சிறப்பெலாம் சிலர்க்கேகிட்டும் சிந்தனையாளன் 'கல்கி'
பெறற்கரும் அமரவாழ்வு பெற்றனன் அவன் பேர் வாழி!!

# ‘அழகில்லாவிட்டால் என்ன! கவர்ச்சியிருந்தால்போதாதா?’

“நீங்கள் அழகில்லாத பெண்களென்பதனுல்கவர்ச்சியும் இல்லாதவர்கள் என்றெண்ணிவிடாதீர்கள், அழகுக்கும் கவர்ச்சிக்கும் எவ்வித தொடர்புமில்லை என்கிருர் பிரபல ஆங்கிலத் திரைப்பட நடிகர் மைக்கேல் கிறே.

‘இந்த இருபதாம் நூற்ருண்டில் பெரும்பாலான இளைஞர்கள் யுவதிகளின் கட்டான உடலமைப்பைக் கண்டு கருத்தைப் பறிகொடுக்கிருர்களே யல்லாமல் ஒரு பெண்ணின் உண்மையான லட்சணங்களை கூர்ந்து கவனிப்பதில்லை,

மற்ருெரு கருத்தைத் தன்வசம் ஈர்த்திழுக்கும்வகையில் தம்மை அலங்கரித்துக் கொள்ளும் பெண்களை என்னைப் பொறுத்தமட்டில்நான் திரும்பிக்கூடப்பார்ப்பதில்லை. அதோடு ஆண்களை அடக்கியாள முயற்சிக்கும் பெண்களை எனக்குப் பிடிப்பதில்லை. பெண்மைக் குணங்கள்நிறைந்துள்ள ஒருபெண் எப்பொழுதும் அடக்கியாளப்படுவதையேவிரும்புவாள்.

அழகு என்பது எப்பொழுதும் தனிப்பட்ட ஒருவரின் கருத்தாகவே இருக்கும் ஒரு பெண் ஒருவனது கண்ணுக்கு அதி அற்புத சௌந்தர்யவதியாகத் தோன்றலாம். அதே பெண் இன்ெருருவனது கண்ணுக்கு வெகுசாதாரணப் பெண்ணுகத் தோன்றக்கூடும்.

நிகரற்ற அழகியென்று எண்ணிக் கொண்டு ஒரு பெண்ணோடு நெருங்கிப் பழகும் போதுஅவள் அறிவற்றவெறும்ஜடமாக இருந்தால் அவள் மீது பின்பும் நான் அக்கறை கொள்ளமாட்டேன்.

விளையாட்டுவீராங்கனைகள் மேல் என் நாட்டம் செல்வதேயில்லை, இந்த விஷயத்தில் பெரும்பாலான ஆண்கள் என்னைப்போன்ற எண்ணமுடையவர்களாகவே இருப்பார்களென நினைக்கிறேன். விளையாட்டுப் போட்டிகளில் எனக்கு அதிக அக்கறை உண்டு. ஆனுல் உயரப்பாய்ச்சல், நீளப்சாய்ச்சல், சைக்கிள் போட்டி, உதைபந்தாட்டம் இத்தகைய விளையாட்டுக்கள் பெண்களுக்கு உகந்ததல்ல என்பது எனது கருத்து.

எனக்கு ஒரு மனைவியும் குடும்பமும் இருக்கிறது. ஒரு நடிகனுக்கு வாய்க்கும் மனைவி சகிப்புத் தன்மையுள்ளவளாகவும், படத்தொழிலோடு சம்பந்தப்படாதவளாகவும் இருக்க வேண்டும்’ என்று மேலும் குறிப்பிடுகிருர் மைக்கல்கிறே,

## இனக்கவர்ச்சி நடிகை ‘பிரிட் ஜெட் பாடெட்’

### அவள்வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்!

ஆங்கிலத் திரைஉலகில் இணையிலா இனக்கவர்ச்சி நடிகை என்றுபோற்றப்படும் பிரிஜெட் பார்டட் என்ற பிரஞ்சு நடிகையைப்பற்றி அறியாத சினிமா ரசிகர்கள் இருக்கமுடியாது.

அள்ள அள்ளக் குறையாத பணம், அளவற்ற புகழ், மனத்துக்குகந்த கணவன், மழலை பொழியும் அழகுக் குழந்தை இத்தனையும்இருந்தும் இருபத்தாறு வயதுள்ள இந்த நடிகை அளவுக்கதிகமான தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயன்ருள்.

ஏன்? அதுதான் மர்மம்! இந்த மர்மத்தை அம்பலப்படுத்த வேண்டுமானுல் பார்டட்டின் வாழ்க்கைச்சுவடியின் ஏடுகளை முதலிலிருந்து புரட்டவேண்டும்.

பார்டட்டின் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த பல சுவையான சம்பவங்களை அடுத்த வாரம் ‘புதின’த்தில் பாருங்கள்.

## ‘அட்வான்ஸ் கொடுங்க சேர்!’

### லண்டனில் புது அனுபவம்!

1958-ம் வருஷம் நடைபெற்ற ஆசிய சினிமாப் படவிழாவில்கலந்து கொள்வதற்காகப் பிரபல இந்தி ஹாஸ்ய நடிகர் ஐ. எஸ். யோஹார் லண்டன் சென்றிருந்தபோது பிரபல ஆங்கிலப்பட டைரக்டரான பிரபோன் பிரபு தமது ஆங்கிலப் படமொன்றில் யோஹாரை நடிக்க வைப்பது என்று முடிவு செய்தார்.


சகல விஷயங்களையும் பேசி முடிவு செய்ததும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. அதன்பின் நடிகர் யோஹார் ‘முற்பணம் ஏதாவதுதரவேண்டும்’ என்று மெல்ல ஆரம்பித்தார்.

‘முன்பணமா? அப்படியென்ருல்’ என்று ஒன்றும் புரியாமல் கேட்டார் ஆங்கில டைரக்டர்.

இந்தியாவில் நடிகர்களை ஒப்பந்தம் செய்ததும் முன்பணம் கொடுக்கும் முறையிருக்கிறது என்று விளங்கப்படுத்தினுர் யோஹார். டைரக்டர் பிரயோன் புன்முறுவலோடு கூறினுர்:

“முன்பணம் கொடுக்கும் வழக்கம் எங்களிடமில்லை, ஆனுல்ஒப்பந்தம் கைச்சாத்தான தும்படம் எடுத்தாலும் சரி, இல்லையானுலும் சரி, நடிகர்களுக்கு முழுத் தொகையையும் உடனேயே கொடுத்து விடுகிருேம்”

இச்செய்தியைக் கேட்டதும் யோஹார் இரண்டு கைகளையும் அகலவிரித்து நீட்டியிருப்பாரல்லவா?



★


இம்மாதம் திரையிடப்பட விருக்கும் ‘மனிதன் மாறவில்லை’ என்றபடத்தில் ஜமுனு—நாகேஸ்வரராவ், சாவித்திரி—ஜெமினிகணேசன் சோடியாக நடிக்கிருர்கள்.

★

## ‘கற்பின் பெருமை’

மனேதத்துவத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட ‘கற்பின் பெருமை’ என்ற கதையைத் தமிழரசி புரொடக்ஷன்ஸார் விரைவில் திரைப்படமாக்கப்போகிருர்கள்.

இப்படத்துக்கான கதை, வசனத்தை புலவர் நாகசண்முகம் எழுதியுள்ளார். இசை அமைப்பை ஜி. கே. வெங்கடேஷ் ஏற்றிருக்கிருர். டைரக்ஷன் பொறுப்பை பிரபல டைரக்டரான எஸ். பாலச்சந்தர் ஏற்றிருக்கிருர்.



## கன்னடக்காரர் வேண்டாம்!

# தமிழரையே மணம்புரிவேன்!

இன்றைய தமிழ் சினிமாவில் சுடர் விடும் நட்சத்திரங்களில் கன்னடத்துக் கட்டழகி சரோஜாதேவியும் முக்கியமானவர். சமீபத்தில் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமிக்கு கன்னடக் காரர்கள் அவமரியாதை செய்ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் கன்னட நடிகர்களுக்கு எதிரான ஒரு போராட்டத்தைத் தொடரப்போவதாகப் பராதிதாசன் அறிவித்துள்ளார். அத்தகைய போராட்டம் முக்கியமாக சரோஜாதேவியையே பாதிக்குமென்பதில் சந்தேகமில்லை! இதுபற்றி ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் நடிகை சரோஜாதேவி, சுப்புலட்சுமிக்கு இழைக்கப்பட்ட அவமரியாதைக்காக தான் மிகவும் வருந்துவதாகக் கூறினுர். அதைத்தொடர்ந்து தனக்குத் தமிழ் நாட்டின் மீதும் தமிழ் மக்களின் மீதும் அதிகஅபிமானம் உண்டென்றும், தான் திருமணம் செய்யும்போதுகூட ஒருதமிழரையே மணப்பாரென்றும் கூறியிருக்கிருர். தன் அம்மாவிக்கு மிகவும் பிடித்தமான ஒரு கன்னடத்து மாப்பிள்ளையை தான் மணக்க மறுத்துவிட்டாரரம்!

## இவரும் ஒரு ‘ப’ பைத்தியம்!

தமிழகத்தில் டைரக்டர் பீம்சிங் ‘ப’ எழுத்தைத் தமது அதிர்ஷ்ட எழுத்தாகக் கருதுகிருரென்று கூறப்படுகிறது. புகழ்பெற்ற இந்தி நடிகர் அசோக்குமாருக்கும் இந்தப் பயித்தியம் உண்டாம்.

அசோக்குமாருக்குஎப்பொழுதும் ‘ப’ வரிசை எழுத்தை முதலாகக் கொண்ட மனிதர், ஊர், உணவு ஆகியவைகளில் விருப்பம் அதிகமாம்

இவரது மனைவியான சோபாதேவி இவரைக் கல்யாணம் செய்யும் போது செல்வி பானர்ஜி அன்று அழைக்கப்பட்டாராம்.

அசோக்குமாரின் மூத்த பெண்ணின் பெயர் பாரதி. இவரது உற்ற நண்பனின் பெயர் பால்தேவ் சோப்ரா. பங்களூர், பாஹட் போன்ற இடங்கள்தான். இவருக்குப் பிடித்தமானவையாம். பற்றிஸ் சாப்பிடுவதென்ருல் இவருக்கு மிகவும் பிடிக்குமாம்.

## மருந்துகொடுக்க தெரியல்லே...!

‘வெள்ளி விழா’ என்ற படம் கோல்டன் ஸ்ரூடியோவில் துரிதமாக வளர்ந்து வருகிறது.

“நோயைக் கொடுத்த மனிதருக்கு மருந்து கொடுக்கத் தெரியல்லே” என்ற கண்ணதாசன் பாட்டுக்கு கே. வி. மகாதேவன் இசையமைத்திருக்கிருர்.

ஆனந்தன், நம்பியார், ஓ: ஏ. கே. தேவர், ராமராவ், நாகேஷ், தேவிகா, ராஜ்ஸ்ரீ, மனேரமா, கண்ணும்பா ஆகியோர் இப்படத்தில் நடிக்கிருர்கள்.

சிறு கதை

# குறிஞ்சிக் காதல்

அது ஒரு மலைப்பிரதேசம். குறிஞ்சி நிலச் சாரல்.

வானளாவிய குன்றுகள், நீர் வீழ்ச்சிகள், மலையடிவாரத்திலுள்ள பூந்தோப்புகள், தினைப்புனங்கள், மலைக்குகைகள், சிற்றாறுகள், பல்சுவைப்பட்ட விலங்கினங்கள் முதலியன அப்பகுதியின் கவர்ச்சியை மேலும் அழகுபடுத்துகின்றன. கண்ணைப் பறிக்கும் வண்ணக் காட்சிகளைத் தினமும் கண்டு களிக்கின்றனர் அங்குள்ள மக்கள். மலைகளிடையில் சூரியன் மறைந்துநிற்கும் பொழுது கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கும். முழு நிலவு நாட்களில் தண்மதியின் தங்கநிலாவொளி மண்ணினை வெண்முலாம் பூசிவிட்டிடும். களவொழுக்கத்திற்கு உகந்த பிரதேசம் குறிஞ்சி நிலம்.

அங்கே—

காளையரும் கன்னியரும் களவில் தங்கள் அகத்தினை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்துவர்.

இன்று—

வானமண்டலத்தில் விண்மீன்கள் கண்களைச் சிமிட்டிக் கொள்கின்றன. திங்களின் பால் நிலவு அப்பிரதேசமெங்கும் ஆடை போர்க்கிறது.

தலைவியொருத்தி தன் பாங்கியருடன் சோலையிடையே விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவள் பெயர் அங்கையற்கண்ணி. வட்டவடிவமான அவள் வதனத்தின் அழகு முழுநிலாவின் ஒளியினால் மிக வெழிலுடன் விளங்குகின்றது. எனினும் அவள் முகத்தில் வேதனையின் சாயல் படர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. அவள் விரகநோயினால் வாடிக் கொண்டிருக்கிறாள் போலும்! காதல் வியாதி அவளையும் வாட்டுகின்றது போலும்! தன்னை மறந்து அவள் பாடுகிறாள்.

சோலையில் கேட்கும் இன்னிசையை ரசித்துக் கொண்டு ஆணழகன் குன்றுத்தேவன் கையில் வேலுடன் வந்துகொண்டிருக்கிறான்.

இதோ—

தேன் குரலெழுப்பிய யௌவன மங்கையைக் காண்கின்றான். நான்கு கண்கள் ஒரே நேரத்தில் சந்திக்கின்றன. ஒரு கணநேரம் சிறிது கலக்கம், பின்னர் தெளிவு. தோழியர் செய்வதறியாமல் திகைத்துநிற்கின்றனர்.

தலைவியிடம் தலைவன் பேசவிரும்புகிறான்.

அவள் செவ்விதழ்களையும், கருங்கூந்தலையும், தாமரை வதனத்தையும், கயல் விழிகளையும் குரும்பையன்ன கொங்கைகளையும், பூவுடலையும் துடியிடையையும் வருணித்துச் செல்கிறான்.

அங்கையற் கண்ணிக்கோ—

வெட்கம் பிடுங்கித் தின்கிறது. அவள் தலையைக் கவிழ்ந்து சிலையாக நிற்கிறாள். பின் அசைவுபெறுகிறாள். காற்பெரு விரலினால் நிலத்தில் ஏதோ கீறிக்கொண்டிருக்கிறாள்.

குன்றத்தேவனின் குறும்புப் பேச்சுக் கேட்டுத் தோழியர் 'கலகல'வெனச் சிரிக்கின்றனர்.

"என்ன, என்னுடன் பேசினால் உன் வாய் முத்துதிர்ந்து விடுமோ?" என்கிறான் அவன்

**கே. எஸ். சிவகுமாரன்**

அவள் விடை பகருவதா வேண்டாமா என்ற இடைநிலையில் தத்தளிக்கும் பொழுது—

மதவெறி கொண்ட வேழமொன்று அவர்களிருக்குமிடம் விரைந்து வருகின்றது.

அங்கையற் கண்ணியும் தோழிகளும் திகிலடைந்து தலைவனை அண்டுகின்றனர். செம்பொன் மேனியாளின் அழகிய அவயவங்கள் பயத்தினால் நடுங்குகின்றன. நாணத்தையும் மறந்து குறத்தேவனைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறாள் அவள். ஓராயிரம் மின்வெட்டுக்கள் அவர்களிருவரின் உடல்களிலும் ஜனித்துப் பாய்கின்றன.

யானையும் அவர்களை நெருங்கிப் பாய்கிறது. தலைவனின் கைகள் தாமே வேலை எய்கின்றன. யானையும் அதனை ஏந்தி வலியினால் தன்வழியே மீண்டு செல்கின்றது. அவள் நன்றியுடன் அவனைப் பார்க்கிறாள்.

குன்றத்தேவன் அவ்வழகியைப் பார்த்து—

"நீ, பயத்தினைத் தெளி! உன் அழகினில் நான் மையல் கொண்டேன். உன்னை என் இல்லக் கிளத்தியாக ஏற்றுக் கொள்வேன். உன்னைப்பிரியவே மாடேன்!" என்றுகூறி அருகில் ஓடிய அருவியின் நீரை அள்ளி ஆணையிடுகின்றான். அதன்பின்பு—

அங்கயற்கண்ணி தோழிகள் பின் தொடர ஓட்டமாக வீடு நோக்கிச் செல்கின்றாள்.

குன்றத் தேவன் புன்னகை பூத்து நிற்கின்றான். காதலுணர்ச்சி அவனைப் பாடத் தூண்டுகின்றது.

• • •

வீட்டையடைந்த அங்கையற்கண்ணி பஞ்சணையில் படுத்துத் துவண்டாள். அவளுடம்பு இன்ப வேதனையில் புல்லரித்தது. நிகழ்ந்தவையெல்லாம் உண்மையிலேயே நடந்தனவா என்று அவளுக்கே சந்தேகம். ஆழ்ந்த நித்திரையில் பல இன்பக் கனவுகள் கண்டாள். விழித்தெழுந்ததும் தோழியிடம் சென்றாள். தோழிக்குத் தலைவியின் இன்ப அனுபவம் நன்கு தெரிந்திருதும்—

"என்னம்மா, ஏதோ சொல்ல விரும்புகிறீர்கள் போலத் தெரிகிறது, சொல்லுங்கள்!" என்றாள்.

"ஆமாம் அம்மங்கை! நித்திரையில் ஒரு இன்பக் கனவு நான் கண்டேனடி!" என்றுகூறி நிறுத்தினாள் தலைவி. பின்பு கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு வெகுளிச் சிரிப்புச் சிரித்தாள். அவ்வளவு வெட்கம்! ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

தலைவியின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட தோழி, தலைவனிடம் தன் தலைவியின் விருப்பத்தை எடுத்துக்கூற எண்ணினாள். தலைவியை அலங்கரித்துக் கொண்டு இருவரும் அவ்விளங் காலையில் மலையடிவாரத்திற்குச் சென்றனர்.

அப்பொழுது—

வேணுகானம் ஒன்று கேட்கிறது—

தலைவனின் வேய்ங் குழலிலிருந்துதான் அவ்வின்னிசை வருகிறதென்பதை தோழிமூலமறிந்த தலைவி, தானும் பாடுகின்றாள்.

தலைவனுக்கு மகிழ்ச்சி தாங்குதில்லை. தான் வாசித்த புல்லாங்குழலின் ஓசையை ரசித்து தன்காதலி புகழ்ந்து பாடுவதைக் கேட்டதும் அவர்களிருக்குமிடம் செல்கிறான்!

இப்பொழுது அங்கயற்கண்ணி கூச்சப் படவில்லை.

தலைவனை நோக்கி முறுவலிக்கிறாள். தலைவனும் அவளை விழுங்கி விடுவதுபோலப் பார்க்கிறான்.

இருவரும் சிலைகள் போல் ஒருவரையொருவர் பார்த்து நிற்கின்றனர். எவ்வளவு நேரம்?

தோழிக்கு இந்த மௌனநிலை பிடிக்கவில்லை. கலைக்க விரும்புகிறாள்.

"அம்மா, அதோ அம்மலைச்சாரலில் இருக்கும் பூக்களைப் பறித்து வருகிறேன்" என்று கூறிச் சாதுர்யமாக அவர்களை விட்டுச் செல்கிறாள் அந்தப் புத்திசாலிப் பெண்!

---

# நடிகையின் திடீர் மறைவு!

வறுமை, ஏமாற்றம், நடத்தையில் மாசுகற்பிக்கும் படியான நிகழ்ச்சிகள், அவமானம் இவைகள்தான் தற்கொலைக்குக் காரணம் என்பதை மரணவிசாரணை அதிகாரிகள் நடத்தும்விசாரணைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது.

வாழ்க்கையில் சம்பவிக்கும் இன்னல்களை எதிர்த்து நிற்க முடியாத கோழைகள்தான் தற்கொலைசெய்துகொள்கிறார்கள் என்பது உண்மைதான்; ஆனால், பிரச்சாரத்துக்காக, அதாவது பத்திரிகைகளில் பெயர், புகைப்படம் வரவேண்டுமென்பதற்காகவும் சிலர் தற்கொலைசெய்ய முயலுகிறார்கள் என்றால் நம்பமுடிகிறதா?

மேல் நாடுகளிலுள்ள நடிகைகள் விளம்பரத்துக்காக எதுவும் செய்யத் தயங்கமாட்டார்கள். சமீபத்தில் ஒரு பிரபல ஜெர்மன் நடிகை முதற் காட்சியின்போது மேடையில் தோன்றிவிட்டு உள்ளேசென்றவர் மறுகாட்சிக்கு மேடைக்கு ஏன் வரவில்லை என்று உள்ளே சென்று பார்த்தார்கள் நிர்வாகிகள். அந்த நடிகை எங்கோ மாயமாய் மறைந்துவிட்டார். 'நடிகையின் திடீர் மறைவு' என்று பத்திரிகைகள் எல்லாம் பெரிதாக எழுதின. அந்த நடிகையின்புகைப்படங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாயின. நடிகையை யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று ஊரெல்லாம்பேசியது. ஆனால் சிலநாட்களில் அந்த நடிகை திரும்பிவந்துவிட்டாள்;

'காட்சி முடிந்து உள்ளே போனேன். யாரோ இருவர் என்வாயைப் பொதித்தூக்கிக்கொண்டுசென்று காரில் ஏற்றினார்கள். ஒருவன் நெட்டையாக இருந்தான்......' இப்படி அந்த நடிகை கதையளந்தாள். கடத்திச்சென்றவர்கள் மட்டும் அகப்படவில்லை!

விபசாரியா, கொலைகாரியா? உண்மைக் கதை

# பயமுறுத்தும் மர்மக்கடிதம்!

முன்கதை:

பேர்சி தோம்சனும் அவள்மனைவி எடித்தோம்சனும் விடுமுறையைக் கழிப்பதாக ஷங்கிலின் இடத்துக்குப் போனபோது, அங்கே பிரெட்ரிக் பைவாட்டேர்ஸ் என்ற இளைஞன் வருகிறான் 27 வயதான எடித்தும் 19 வயதான இந்த இளைஞனும் காதல் வசப்படுகின்றனர்! விடுமுறை முடிந்து ஊர் திரும்பியதும், தங்கள் வீட்டிலேயே பிரெட்ரிக்கை ஒரு 'போட' ராகத் தங்கும்படி செய்கிறாள் எடித். அவள்கணவன் ஆரம்பத்தில் இவர்களை சந்தேகிக்கவில்லை. ஆனால் கள்ளக் காதலரின் போக்கு அவன்மனதில் சந்தேக விதையை ஊன்றுகிறது. பிரெட்ரிக்கை வீட்டை விட்டு வெளியேற்றுகிறான் தோம்சன். ஆயினுமென்ன, எடித் இரகசியமாக அவனைச் சந்தித்துக் குலவாடுகிறாள். கடைசியில் கணவனைத் தீர்த்துக் கட்டி விடுவதென்று முடிவுக்கும் வந்துவிடுகிறாள் ........

இதைப்பற்றிக் கப்பலில் வேலைசெய்யும் தனது கள்ளக் காதலனுக்குக் கடிதம் எழுதுகிறாள். ஒருநாளிரவு கணவன் குடிக்கத் தண்ணீர் கேட்டபோது அவனுக்கு விஷமூட்ட இதுதான் தக்கதருணமென்று எண்ணுகிறாள். அதைப்பற்றி அவள் பிரெட்ரிக்கு எழுதிய கடிதம்...

''நள்ளிரவில் தண்ணீர் கேட்டவருக்குக் கொண்டு வந்து கொடுத்தேன், எத்தகைய தண்ணீர் கொண்டுவந்து கொடுத்திருப்பேன் என்பது உனக்குத்தெரியும். ஒரேயடியாக அவரது உயிரை வாங்கி விட்டு ஆபத்தில் மாட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை, நஞ்சு சிறிது சிறிதாகத்தான் அவரைக் கொல்லவேண்டும். அப்போதுதான் எங்கள்மீது சந்தேகம்விழாது'' என்று அன்றைய சம்பவத்தைத் தனது கள்ளக் காதலன் பிரெட்ரிக் பை வாட்டேர்ஸுக்கு எழுதுகிறாள் எடித்தோம்சன்.

''தனக்கு உடல்நலமில்லை என்று அவர் (கணவன்) கூறுகிறார். அது உண்மையாக இருக்கலாம். அவரது கண்கள் வெளிறிப் போய்விட்டன. தூக்கமின்மை நோய்க்கு யாரோ நண்பரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டாராம். அதனால் தனது உடல் நலம் குன்றி விட்டது என்று அவர் என்னிடம் கூறினார், அவர் கூறியதை அப்படியே நான் ஏவிஸ்ஸிடம் கூறியிருக்கிறேன். அப்படியாராவது ஒருவருக்குக் கூறிவைத்தால் ஏதாவது ஒன்று நடக்கும்போது அது எங்களுக்குச் சாதகமான சாட்சியாக அமையுமல்லவா?'' என்று மேலும் கடிதத்தில் எடித் குறிப்பிடுகிறாள்,

உண்மையில் இப்பொழுது நிம்மதியை இழந்துவிட்டாள், பிரெட்ரிக்மீது அவள் கொண்டுள்ள காதல் தீவிரமடைந்துவிட்டதால் எப்படியும் விரைவாகக் கணவனை ஒழித்துக் கட்டி விடவேண்டும் என்ற ஆவல் அவள் நிம்மதியைக் குலைத்துக்கொண்டேயிருந்தது பல்வேறு வகையான நச்சுத் திராவகங்களை அவள் சேகரித்தாள். அதே நேரத்தில் பிரெட்ரிக்கும் கொஞ்சம் கொஞ்சமாக உயிரைக் குடிக்கும் தன்மையுள்ள திராவகங்களை வாங்கி அனுப்பினான். ஒருவர் கண்ணிலும் படாமல் அவற்றைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதே அவளுக்குப் பெரும் பிரச்சனையாய்ப் போய் விட்டது.

அவள் நிம்மதி குலைந்ததற்கு மற்றுமொரு காரணமுமிருந்தது. அதுதான் அவள் தங்கை ஏவிஸ்.

முன்பெல்லாம் அவள் குடும்பத்தோடு பிரெட்ரிக்பை வாட்டேர்ஸ் ஒட்டிப்பழக ஆரம்பித்ததே ஏவிஸுக்காகத்தான். ஆனால் அக்காளுக்கும் தனது காதலன் பைவாட்டேர்ஸுக்கும்இடையேயுள்ள தொடர்பை ஏவிஸ் நன்குபுரிந்து கொண்டாள், இவர்களுடைய நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துத்தான் ஏவிஸ் விஷயத்தைத் தெரிந்து கொண்டாள் என்பதல்ல. எடித்தே தன் தங்கையிடம், தனக்கும் வாட்டேர்ஸுக்கும் இடையேஉள்ள தொடர்பைப் பல தடவைகளில் ஒழிவு மறைவின்றிக் கூறியிருக்கிறாள். அவள் அவ்விதம் கூறியதற்கு முக்கிய காரணமொன்றிருந்தது.

பிரெட்ரிக்குக்குத் தன் சுவை குன்றிவிட்டால் அவன் நாட்டம் தங்கைமீது சென்று விடுமோ என்ற பயம் எடித்தின் உள்ளத்தில் சதா உறுத்திக்கொண்டேயிருந்தது. இந்தப் பயம் நாளடைவில் பொறுமையாக மாறிவிட்டதால் எடித் தனது காதலனுக்கு எழுதும் கடிதங்களில் அடிக்கடி ஏவிஸ்ஸைப்பற்றி எழுதினாள்.

''அன்பே, உனக்கும் எனக்கும் இடையே உள்ள கள்ளத் தொடர்பை நாடறியச் செய்துவிடுவேன். ஏவிஸ் பயமுறுத்தியதால் அவள் வாயை அடைக்க அவளை நீ மணந்து கொள்வதாக நான் கனவு கண்டேன்'' என்று பிரெட்ரிக்குக்கு எழுதுகிறாள் எடித்.

எடித் உண்மையில் கனவு கண்டாளோஎன்னவோ, இக் கடிதத்திலிருந்து அவள் மனத்திலிருந்த பயம் புலப்படுகிறது.

''இன்று நான் ஏவிஸுக்கு டெலிபோன் செய்தேன். எனது கணவர் என் பெற்றாரிடம் சென்று உனக்கும் எனக்கும் இடையேயுள்ள தொடர்பைப் பற்றிப் புகார் செய்தாராம். 'அவமானம், அவமானம் என்று கூறி என் தந்தை தலையில் அடித்துக்கொண்டாராம், என்னைக் கூப்பிட்டனுப்பிஇதுபற்றி விசாரிக்கப்போவதாகவும் கூறினாராம். அன்பே, என்னைமட்டும் அவர் இதுபற்றி ஏதாவது கேட்டால் நான் உள்ளதை அப்படியே தயங்காமல் கூறிவிடுவேன். அதனால் என்ன நேர்ந்தாலும் சரி'' என்று மற்றோர் கடிதத்தில் எடித் குறிப்பிடுகிறாள்.

மோறியா இங்கிலாந்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. எடித் மகிழ்ச்சிக்கட

**'அசோகன்'**

லில் மூழ்கினாள். நீண்டகால இடைவெளிக்குப் பின் வருகிறான் பிரெட்ரிக்பை வாட்டேர்ஸ். இந்தமுறை நீண்டலீவில் அவன் இங்கிலாந்தில் தங்கியிருப்பான். அவனை எப்படிச் சந்திப்பது, அவனோடு எங்கெல்லாம் சுற்றுவது, லீவுநாட்களை எப்படிக் கழிப்பது என்றெல்லாம் கற்பனை மாளிகையை எழுப்பி அதிலே இன்பமாக நடமாட ஆரம்பித்து விட்டாள் எடித்.

எதிர்பார்த்த நாளும் வந்துவிட்டது. வழக்கம் போல் காதலர்கள் இரகசியமாகச் சந்தித்தார்கள், உரையாடினார்கள். உல்லாசமாகப் பொழுதைக் கழித்தார்கள்.

ஆனால்—

பிரெட்ரிக்கின் போக்கில் சிறிது மாற்றம் ஏற்பட்டிருந்தது. முன்போல் அவன் உற்சாகமாக இருக்கவில்லை. பேர்ஸி தோம்சனை ஒழித்து விட்டு எடித்தை மணம் புரிந்து சந்தோஷமாக வாழ்க்கை நடாத்தலாம் என்று அவன் எண்ணியிருந்தான், அந்தநம்பிக்கை சிறிது சிறிதாகக் குறைந்து விட்டதோ என்னவோ?

எடித்தின் சிந்தனை மற்றொருபக்கத்தால் பிரயாணம் செய்தது. இம்முறை பிரெட்ரிக் கடமையாற்றிய கப்பல் ஆஸ்திரேலியா செல்லப்போகிறது. ஆஸ்திரேலியாவில் பிரெட்ரிக்குக்கு ஒரு சிநேகிதி இருக்கிறாள். அவள் அவனுக்கு எழுதிய அன்பு பொதிந்த கடிதங்களைக் கூட அவள் வாசித்திருக்கிறாள், அந்தச் சிநேகிதி வாழும் ஊருக்குப் பிரெட்ரிக் போகப்போகிறான், அதன் விளைவு எப்படி யிருக்குமோ? நாளடைவில் என்னை மறந்துவிடுவானோ? எடித் தவியாய்த் தவித்தாள், தனது பயத்தை வெளியிட்டால் அவனைத்தான் சந்தேகிப்பதாக அவன் எண்ணி விட்டால்......?

''அன்பே, என்னைக் கைவிட்டுவிடாதே. இந்த உலகில் எனக்குச் சகலமும் நீதான் உன்னோடு ஓவடிரவே நான் தயாராயிருக்கிறேன், உனக்கு வேண்டிய இடத்துக்கு என்னை அழைத்துச்சென்றுவிடு. இந்த நிலையில் மேலும்என்னை நீ விட்டுச் சென்றால் தற்கொலை செய்வதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை" என்று மன்றாடினாள் எடித்.

பிரெட்ரிக்கின் வாயிலிருந்து திட்ட வட்டமான பதில் வெளிவரவில்லை. 'எங்களுக்கும் காலம் வரும் பொறுத்திருப்போம்' என்று மட்டுந்தான் சொன்னான்.

மோறியா புறப்பட்டு விட்டது. ஆமாம்; ஆஸ்திரேலியாவை நோக்கிக் கப்பல் சென்று கொண்டிருக்கிறது: எடித்ஒன்றன்பின்னொன்றாய்க் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தாள். பிரெட்ரிக்கும் பதில் எழுதினான், முன்போல் அவன் எழுதும் கடிதங்களில் உயிர் இருக்கவில்லை.

இந்த நேரத்தில் அவனது பிறந்த நாள் வந்தது. எடித் அவனை வாழ்த்தி ஒரு தந்தி அனுப்பினாள், அதைத் தொடர்ந்து பழைய சம்பவங்களை நினைவுறுத்தி ஒரு நீண்ட கடிதமும் எழுதினாள். அதற்கு பிரெட்ரிக் எழுதிய பதிலில் தன் உள்ளத்தைத் திறந்து—தன் அன்பையெல்லாம் கொட்டி எழுதினான். இப்பொழுதுதான் எடித்தின் உள்ளத்தில் சாந்தி ஏற்பட்டது.

நீண்ட நெடுங்காலத்துக்குப் பின் — 14 மாதங்களின் பின் மோறியா என்ற கப்பல் பிரெட்ரிக் பைவாட்டேர்ஸையும் சுமந்து கொண்டு இங்கிலாந்தை நோக்கி வந்து கொண்டிக்கிறது, பிரெட்ரிக்கை விரைவில் பார்க்கப் போகிறோம் என்ற ஆனந்தத்தில்குளிக்கும் அறைக்குள் சென்ற எடித் சுவரில் கீழ்க்கண்ட குறிப்பை எழுதிவைத்தாள்.

''ஐந்து வருடங்கள் பொறுத்திருக்கும்படி கூறினாய், என் அன்பே, மூன்று வருடம் பத்துமாதங்கள் மட்டுந்தான் கழிந்திருக்கின்றன.

இன்பவாரியிலே மூழ்கி மூழ்கி முக்குளித்துக்கொண்டிருந்த எடித்தின் இன்பக் கனவுக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் முன்பின் அறியாத ஒருவரிடமிருந்து அவள் பேருக்கு பயமுறுத்தற் கடிதம் ஒன்று வந்திருந்தது.

[தொடரும்]

மங்கையர் அணியும்

தங்க நகைகள்



★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும்
ஓடர்கள் கொடுப்பதற்கும்

பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.

## இறந்தவளை மணந்தவன்!

சுமார் பதினெட்டு வருடங்களுக்கு முன் இறந்த ஒரு பெண்ணை, தைப்பேயைச்சேர்ந்த ஒருவர் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டார்.

ஹ ஆங் குரு செங்என்ற இந்த மனிதர் ஒரு கொந்தராத்துக்காரர். இவருக்கு நாற்பது வயதாகிறது.

இவருக்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் நோய் கண்டதாம். ஒருநாள் இவர் கனவில் ஒரு அழகியைக் கண்டு அவள் மீது காதல் கொண்டாராம்.

இந்தநபருக்கு ஏற்கெனவே ஒருமனைவி உண்டு. கணவனின் உடல் நாளுக்கு நாள் நலிவதைக் கண்டு கவலைகொண்ட மனைவி ஒருமந்திர வாதியைச் சந்தித்து எப்படியும் தன் கணவனைக் குணப்படுத்தும்படி கேட்டுக் கொண்டாள்.

''உன்கணவன் கனவில்கண்ட கன்னியைக் கல்யாணம் செய்து கொண்டால் குணமடைவான்'' என்றுதிருவாய் மலர்ந்தருளினன் மந்திரவாதி.

மனைவியின் அனுமதியோடு கனவில் கண்ட அழகியின் அங்க அடையாளங்களைக் கொண்ட பெண் இருக்கும் இடத்தைத் தேடி அலைந்தான் ஹ ஆங். கடைசியில் அந்தப் பெண்ணின் பெற்றோரைத் தான் அவனுல் கண்டுபிடிக்க முடிந்தது:

கனவில் கண்ட பெண் சுமார் 18 வருடங்களுக்குமுன் —பதினெட்டு வயதாயிருக்கும் போதே இறந்து விட்டாளாம். இருந்தும் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டன.

மணப்பெண்ணுக்குப் பதிலாக, ஒரு அழகான பலகையில் சிலை சமைத்து, அதில் அந்தப் பெண்ணின் பெயரைப் பொறித்து வைத்திருக்கிருர்கள்.

சென்றவாரம் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீதனம் கூடக் கொடுக்கப் பட்டதாம்.

இப்பொழுது தனது உடல் நிலை நன்கு தேறிவிட்டதாக ஹ ஆங் குரு செங் கூறுகிருன்.

## கவனக் குறைவுக்கு பரிசு!

ஸ்திரிகைப் பெட்டியைக் கவலையீனமாக வைத்த,பாங்கொக்கைச் சேர்ந்த ஒருபெண்ணுக்கு மூன்று வருடச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

ஸ்திரிக்கைப் பெட்டியின் வெப்பத்தினுல் உடையில் தீப்பற்றி 794 வீடுகள் சாம்பலானதோடு ஒருமனிதனும் கொல்லப் பட்டான். இச்சம்பவம் சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது.

தீயினுல் ஏற்பட்ட சேதம் சுமார் எழுபத்தைந்து லட்சரூபா எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

## ஓவசியர் வேலைக்கு பட்டதாரிகள் படையெடுப்பு!

யாழ்ப்பாணம் மராமத்து இலாகாவில் காலியாகவுள்ள மூன்று ஓவசியர் ஸ்தானங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப் பட்டன. அதைத் தொடர்ந்து சுமார் அறுநூறு பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த அறுநூறு விண்ணப்பதாரர்களுள் சிலர் பட்டதாரிகளாகவுமிருந்தனர்.

## விதவைக்கு வந்த அதிர்ஷ்டம்

ரத்தினபுரியில் உள்ள ஒரு விதவைப் பெண்ணின் வீட்டில் 'தொயில்' (குறைபாடுகளை அகற்றச் சிங்கள நாடுகளில் நடாத்தப் படும் ஒருகொண்டாட்டம்) நடத்தினுர்கள்.

கொண்டாட்டத்தை நடாத்தக் களிமண் தேவைப்பட்டதால் அந்தவிதவைப் பெண் தனது வீட்டின் பின்புறம் சென்று மண் வெட்டினுள். மண்ணுக்குள் பூனையின் கண்மணியைப்போல் ஏதோ பளிச்சிட்டது. அதை எடுத்துக் கழுவிப் பார்த்தபோது அது ஒரு விலைமதிக்க முடியாத ரத்தினக்கல் என்று தெரிய வந்தது.

அந்தக்கல் லட்சரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ளதாம்.


இந்த விதவைப் பெண் ஐங் குழந்தைகளுக்குத் தாய். இவளது கணவன் மூன்றுமாதங்களுக்குமுன் துப்பாக்கிச் சூட்டினுல் மரணமடைந்தான்,

## குதிரையும் மனிதனும்

உலகிலேயே அதிகமாகப் பத்திரிகை வாசிப்பவர்கள் பிரிட்டிஷார் என்று ஐ. நா வெளியிட்ட, 1961-ம் ஆண்டுக்கான புள்ளி விபரப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இப்புத்தகம் சென்ற திங்கட்கிழமை வெளியிடப் பட்டது. அமெரிக்கர்களே அதிகமான மோட்டார்களையும் உபயோகிக் கிருர்கள். ரஷ்யாவிலும், ஜப்பானிலும் உலகிலேயே அதிகமான ரெயில் பிரயாணிகள் இருக்கிருர்கள்.

சினிமா விசிறிகள் ஹாங்கொங்கிலும், லெபனுனிலும் அதிகமாகவுள்ளனர். உலகம் முழுவதிலுமுள்ள குதிரைகளின் எண்ணிக்கை 6 கோடி 88 லட்சமாகும்.




1960ம் வருடத்தில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டின்தொகை இரண்டுகோடி லட்சமாகும்.

1960-ம் வருட மத்தியில், உலக ஜனத்தொகை 29,950 லட்சமாகும். இத்தொகை 1950-ம் வருட ஜனத்தொகையிலும் பார்க்க 19 வீதம் அதிகமானது.

## வித்தியாசம் இல்லையா?

ஒலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்பவர் அமெரிக்காவிலுள்ள ஒருபிரபல ஆசிரியர், இவர் ஒருசமயம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியைப் பாடசாலை என்று எண்ணிக் கொண்டு அதன் காவலாளியிடம் சென்று ''இந்தப் பாடசாலையில்.........'' என்று ஆரம்பித்தார்.

காவலாளி சிரித்தபடியே ''இது பாடசாலை அல்ல சேர்; இதுபைத்திய ஆஸ்பத்திரி'' என்ருன்.

ஆசிரியர் உடனே சமாளித்துக்கொண்டு ''பார்க்கப் போனுல் இரண்டுக்கும் அதிக வித்தியாசமில்லை," என்ருர்,

காவலாளியும் விட்டுக் கொடுக்காமல் 'நீங்கள் சொல்வது தவறு சேர். இங்கேவந்தவர்களுக்குக் கொஞ்சமாவது அபிவிருத்தி ஏற்படாவிட்டால் வெளியே செல்ல அனுமதிக்கப் படுவதில்லை,'' என்ருன்.

## வியாபார மர்மம்!

நியூ யோர்க்கிலுள்ள ஒரு வர்த்தகஸ்தாபனத்தில் வியாபாரம் குறைந்து விட்டதால் அதை நிவர்த்தி செய்வதற்கு அதன் மனேஜர் பல முறைகளைக்கையாண்டார். ஒன்றுமே பலனளிக்க வில்லை.

திடீரென்று வியாபாரம் பெருக ஆரம்பித்தது. அதன் மர்மம் என்னவென்று மனேஜரை விசாரித்தபோது அவர் கூறினுர்.

''ஆண்களைக்கவரப் பெண்கள் 'சென்ட்' பூசிக்கொள்ளும் வழக்கம் தொண்டு தொட்டு இருந்து வருகிறது. அதேபோல் நமது வாடிக்கைக் காரர்களைக் கவர என்ன செய்யலாம் என்று யோசித்தேன். பொருட்களை வைக்கும் ஒவ்வொரு பெட்டிகளிலும் வெவ் வேறு வகையான 'சென்ட்' ஊற்றி வைத்தேன். அது எதிர்பார்த்ததைவிட அதிகபலனைத்தருகிறது''

ஒரு பொருளை வாங்குவதற்காக அதுவைக்கப் பட்டிருக்கும் பெட்டியின் சமீபம் செல்லும் பெண்ணுயினும்சரி ஆணுயினும்சரி சென்டினுல் கவரப்பட்டு அந்தப்பொருளை வாங்கிக் கொள்ளுகிருர்கள் என்று அந்த வியாபாரி கூறுகிருர்.

## நடிகரும் பெனியனும்

அமெரிக்காவில் உள்ள ஒரு பிரபல பெனியன் கம்பெனியில் திடீரென்று வியாபாரம் ஸ்தம்பித்துவிட்டது. அதன் காரணத்தை அறியமுடியாமல் தொழில் அதிபர்கள் திண்டாடினுர்கள்.

ரகமோ மிகச்சிறந்தது. விலையும் குறைவு. பின்ஏன் வியாபாரம் ஸ்தம்பித்துவிட்டது? கடைசியில் உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

அமெரிக்காவின் பிரபல சினிமா நடிகர் கிளார்க்கேபிள் ஏதோ ஒரு படத்தில் ஒரு சமயம் தமது சேர்ட்டைக் கழற்றும்போது உள்ளேபெனியன் அணிந்திருக்கவில்லையாம். அதைப்பார்த்த ரசிகர்கள் 'கிளார்க்கேபிளேபெனியன் அணியவில்லை நாம்ஏன் அணியவேண்டும்' என்று பெனியன் வாங்குவதை நிறுத்திக் கொண்டார்கள். காலகதியில் அதுவே நாகரீகமாக மாறவும் ஆரம்பித்து விட்டது.

உடனே பெனியன் கம்பெனி அதிபர்கள் கிளார்க் கேபிளிடம் சென்று முறையிட்டார்கள். உங்களால் எங்கள் கம்பெனியை மூடவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது என்று கூறினுர்கள்.

கிளார்க்கேபிள் பெரிய மனதோடு தான் நடித்த மற்றப் படங்களில் பெனியன் அணிந்திருந்தார். அதன்பின் ரசிகர்களும் பெனியன் வாங்க ஆரம்பித்து விட்டார்களாம்.

(இத்தகவலை வெளியிட்டவர் தென்னிந்திய சினிமா நடிகர் ஜெமினிகணேசன்)

## வெள்ளைக் காரிக்குப் புரிந்தது!

முன்னெரு போது இந்தியாவில் மொலோனி என்ரெரு கலெக்டர் இருந்தார் ஒருசமயம்அவருக்குத தெரிந்த ஒரு வெள்ளைக்காரப் பெண் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவைச் சுற்றிப்பார்ப்பதற்காக வந்திருந்தார்.

பல இடங்களுக்கும் அப்பெண்களை அழைத்துச் சென்ற கலெக்டர் ஒரு பரதநாட்டியக் கச்சேரிக்கும் அவரை அழைத்துச் சென்ருர்.

ராதா கிருஷ்ண—நடனம் நடந்தது. ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியமே அந்நடனத்தின் உட்பொருள் என்பதை அந்த வெள்ளைக்காரமாதுக்கு விளக்கினுர் கலெக்டர்.

பிறகு ஐரோப்பாவிலுள்ள தனது சிநேகிதிகளுக்கு அந்தப் பெண் கடிதம் எழுதும் போது கீழ்க்கண்டவாறு எழுதினுர்:

''இந்தியாவில் விபசாரத்தையே தொழிலாகக்கொண்ட பெண்கள்கூட, ஐரோப்பாவில் உள்ள குடும்பப் பெண்களைக் காட்டிலும் மிக அடக்கமாக ஆடை அணிகிருர்கள். அதோடு இளங் காதலர்கள் அந்தரங்கமாகச் சந்தித்து உரையாடும்போது கூட அரிய தத்துவக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிருர்கள்'' (ஒரு பிரசங்கத்தின் போது ஏ. எஸ். பி, ஐயர் குறிப்பிட்டது.)

# கேள்வி - பதில்!

ரமணன்

பொதுத் தொண்டன் மணி,
கந்த கெதர பஜார்.

கே;- புரட்சிப் புலவன் பாரதி பாரதத்தில் இன்று இருந்தால் எந்தக் கட்சிக்குத் தனது ஆதரவைக் கொடுத்திருப்பான்?

ப:- எந்தக் கட்சிக்கும் தனது ஆதரவைக் கொடுக்காமல் ஓர் புதுக்கட்சி தொடங்கியிருக்கக் கூடும்!

தினகரன், சுழிபுரம்.

கே:- இன்றைய ஈழத்தின் அரசியல் நிலைபற்றித் தங்கள் கருத்தென்ன?

ப:- நிலைதடுமாறிக் கொண்டிருக்கிறது!

மு. செ. நடராசா, வேலணை.

கே:- யாழ் மாநகர சபை அங்கத்தவர் தனக்குத் தமிழ் விளங்காதென்றாராமே! இது அவமானமாயில்லையா?

ப:- அவமானம் அவருக்கல்ல; உண்மையை ஒளியாமல் கூறிய அவரது பண்பு வாழ்க!

பெ. இராமலிங்கம்,
கந்தகெதர.

கே:- இலங்கைத் தமிழனின் முன்னேற்றம் எப்பொழுது தொடங்கும்?

ப:- நாம்தான் தமிழ்வளர்க்கிறோம்! எனக் கூறுபவர்கள் அழியும்போது!

கி. மு. கலீம், வந்தாறுமூலை.

கே:- யாழ்ப்பாணிகளின் பாணியே ழேப்பாணி என்கிறாரே ஒரு யாழ்ப்பாணி! இது பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப:- பாணியில் ழேப்பாணி தான் சத்துள்ளது என்று நினைக்கிறார் போலும் அவர்!

பொ. சண்முகநாதன்,
மானிப்பாய்.

கே:- முஸ்லீம் மக்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப:- தங்களுடைய இன, மத பண்பாடுகளைச் சிறப்புடனும் பெருமையுடனும் கட்டிக்காத்து வருவதில் வெற்றிகாண்பவர்கள். தமிழர்களில் 'குமாரசாமி'களைப்போல அவர்களிலும் 'பதியுதீன்'கள் இருக்கிறார்கள்!

ஆர். சாந்தினி, கொழும்பு.

கே:- அமெரிக்காவுக்குச் சென்றிருக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஏதாவது ஆங்கிலப் படம் ஒன்றிலாவது நடிக்கமாட்டாரா?

ப:- சிவாஜி அமெரிக்காவுக்குச் சென்றதே இக்காரணத்துக்காகத்தான் என்கின்றனர் சிலர். பலரோ இதைமறுக்கின்றனர். என்ன இருந்தாலும் சிவாஜி ஆங்கிலப் படத்தில் நடித்தால் அது எமக்கும் பெருமைதானே!

கே:- சிவாஜி நடித்த 'கப்பலோட்டிய தமிழன்' படம் இலங்கைக்கு எப்பொழுது வரும்?

ப:- அப்படம் வரவே மாட்டாது போலத் தெரிகிறது. ஏனெனில் அப்படத்திற்கு எமது அரசாங்கம் தடைவிதித்துள்ளதாம்.

## பரிசுக் கேள்வி

திருமதி. சச்சிதானந்தம்,
கொழும்பு—6

கே;- இராணுவச்சதி என்றால் என்ன?

ப:- பிடிபட்டால் தேசத்துரோகம்; பிடிபடாவிடில் தேசப்பணி!

பொ. பூபாலசிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே:- இன்பம் எங்கே இருக்கிறது?

ப;- யாருடைய இன்பம்? உமது இன்பம் உமது மனதுக்குள்ளேதானே இருக்கிறது!

கே:- நிம்மதிக்கு என்னசெய்யலாம்?

ப:- போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!

வளவன், கொழும்பு.

கே:- முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒன்றுண்டே! இந்த 'முற்போக்கு'க்கு அவர்கள் கொண்ட அர்த்தமென்ன?

ப:- சுருக்கமாகச் சொன்னால் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளுக்கு மாறுபடாமல் எழுதுவதே முற்போக்கு என்று அவர்கள் கருதுகிறார்கள்.

எஸ். முனியாண்டி,
நுகயகொடை.

கே:- பேய் பிசாசுகள் இந்த உலகில் இருக்கின்றனவா?

ப:- நான்காணவில்லை. ஆனால் எனக்குத் தெரிந்த பலவீடுகளில் இந்தப் பேயும் பிசாசும் இருக்கின்றன போலத்தான் தெரிகிறது. இந்த வீடுகளில் "பேயே பிசாசே" என்று யாரோ கூப்பிடப் படுவதைக் கேட்டிருக்கிறேன்: ஏன், நீர் கூட உமது பக்கத்தில் கேட்டதில்லையா?

வே. பலவசம், வெளிக்கடை,

கே:- உலகில் விஞ்ஞானிகளே இல்லாவிட்டால் உலகம் எப்படியிருக்கும்?

ப: நிம்மதியாக இருக்குமென்று நினைக்கிறீரா? தவறு. விஞ்ஞானிகள் இல்லாவிட்டால் மூடநம்பிக்கைகள் இதற்குள் மக்களை விழுங்கியிருக்கும்!

கே:- தாங்கள் ஒரு பெண் பித்தர் என்று கேள்விப் பட்டேன்.

ப:- சரியாகச் சொன்னீர்! நான் ஒரு பெண் பித்தன் தான்—அந்த ஒரே ஒரு பெண் எனது மனைவிதான்!

விட்ட குறை

## காதலன் செய்த தியாகம்!

[பிரச்சனைக் கதைபற்றிய கருத்துக்களில் மேலும்சில துளிகளை இங்கு தருகிறோம் இவ்வளவுடன் இதுபற்றிய கருத்தரங்கம் நிறுத்தப் படுகிறது.]

சுமதியை மணப்பது நல்லது எனின் அமுதாவின் வாழ்வு என்னவாவது? கருத்தொருமித்த காதலர்கள் எப்படிப் பிரிய முடியும். காதல்பேதையில்...........?

வேலணை, — இளவழகன்.

※ ※ ※ ※

ஒருபெண்ணுக்கு வாழ்வளிப்பதால் அவன் கூறும் கன்னியரின் வாழ்வையெல்லாம் வளம்படுத்திடக் கூடுமா? அதற்கு ஒரு பொதுப் பரிகாரம் தேடுவதன்றோ சிறப்பு!

மத்துகமம், — மு. க. ராஜா.

※ ※ ※ ※

தியாகம் செய்ய வேண்டும். ஆனால் துரோகம் செய்யாதிருக்க வேண்டுமல்லவா?

திருகோணமலை, — சபா. செ. சிவம்.

※ ※ ※ ※

பரிதாபத்துக்குரிய சுமதியைக் கடைத்தேற்றுபவர் யார்? ஆனந்தனைப் போன்ற ஒரு சிலர்தான் முன்வரலாம். அமுதாவைப் பொறுத்த வரையில் அவள் திருமணம் செய்யாமலே வாழ்க்கையைக் கழிக்கலாம்.

காரைநகர், — க. சுப்ரமணியம்.

※ ※ ※ ※

இக்கதைக்கு "காதலன் செய்தமோசம்" என்று தலைப்புக் கொடுத்திருக்கலாம்.

வட்டுக்கோட்டை, — இ. தவராசா.

## அமெரிக்காவில் பொம்மலாட்டம்!



"இளவரசி" என்ற பொம்மைக் கூத்துக்கு ஒத்திகை பார்க்கிறார் திருமதி கோரு பெயர்ட். நியூயோர்க் நகரிலுள்ள ஹண்ரா கல்லூரியில் ஒருவருடம் பயின்ற திருமதி பெயர்ட் மேடைகளில் நடித்துப் பிரபலமடைந்தவர். பொம்மைக் கூத்து நடத்தும் கலையை இவர் தமது கணவனிடமிருந்து கற்றுக்கொண்டார். கணவனும் மனைவியும் சேர்ந்து நடாத்தும் இந்தப் பொம்மைக் கூத்துக்கு அமெரிக்காவில் பெருமளவு செல்வாக்கு ஏற்பட்டு வருகிறது.


## உங்கள் கவலை என்ன?

- கடன் தொல்லையா ? கஷ்ட நிலையா ?
- காதலில் வெற்றி பெற வேண்டுமா ?
- இல்லற வாழ்வில் இன்பம் தேவையா ?
- கணவன்-மனைவிக்கிடையே மனக்கசப்பா ?
- வழக்குக் கஷ்டங்களா? பரீட்சையில் துன்பமா?
- தொழில் உயர்வா ? பிணிகளினால் துன்பமா?
- மங்கையருக்கு ஏற்படும் மாதவிடாய் நோயா?

விஷயங்கள் பரமரகசியமாக வைக்கப்படும்
கவர்மென்ட் றெஜிஸ்டர் மந்திராச்சாரியார்

**பி. எம். திசநாயகா**

(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)
அருத எண்ணெய் அலுவலகம்,
கம்பளை.

## ஈழத்து எழுத்தாளரிட மிருந்து சில சுவையான தகவல்கள்:

பேட்டி:- 'ரமணன்'

# புதுமைலோலன்



● நீங்கள் ஒருபிரபல அரசியல் பேச்சாளராகவும் விளங்குகிறீர்களல்லவா! பேசுவதிலா எழுதுவதிலா உங்களுக்கு விருப்பம் அதிகம்?

இரண்டிலுமே விருப்பமதிகம். ஆனால், பேசுவதற்கு அதிக சந்தர்ப்பத்தை சங்கங்கள், நண்பர்கள் தந்துவிடுகின்றனர், எழுத வேண்டுமென்ற துடிப்பு அதிகம். எனினும் பாடநூல்கள்எழுதுவதிலேயே இன்றைய நேரம் கழிகின்றது.

● ஒரு எழுத்தாளர், அரசியல்வாதியாகவும் இருப்பது அவரது எழுத்துத்துறைக்கு சாதகமாயிருக்குமா, பாதகமாயிருக்குமா? ஏன்?

ஒரு தனிமனிதனோ, அல்லது எழுத்தாளனோ ஓர் இலட்சியத்தினடிப்படையில் இருப்பது நன்மை பயக்கும். வாழ்வுடன் பிணைந்துவிட்ட அரசியலிலும் கொள்கையாளனாக, எழுத்தாளன் இருக்கவே செய்வான்; வெளிப்படையாகக் கூறாவிடினும், அவனது உள்ளம் ஒரு கொள்கையில்பற்றுக்கொண்டேயிருக்கும். "எந்த அரசியலும் சேராத பொது மனிதன் நான்" எனக்கூறும் எழுத்தாளன் நடிக்கிறான். திட்டவட்டமான கொள்கையுடன் அரசியலிலும் ஈடுபடும் எழுத்தாளனே சமூகம் வளர உதவுபவன். அவனது பேனாவே வலியுடையதாயிருக்கும் என நம்புகிறேன். ஒரு எழுத்தாளன் அரசியல்வாதியாகஇருக்கும் போது, சமூகச்சிக்கலின் அடிப்படைகளையும், மனிதவாழ்வில் அரசியலின் பெரும் பங்கையும் உணர, உண்மையைக் கண்டு பிடிக்க முடிகின்றது. அரசியல் நாட்டிற்கு உயிர் போன்றதல்லவா? அப்படியானால் அந்த உயிரை எழுத்தாளன் இழந்து விடுவதா? சில எழுத்தாளர் எல்லாரிடமும் நல்லபிள்ளையாக இருக்க, அரசியலில் ஈடுபடாதது போலக் காட்டிக் கொள்வதை யான் காண்கின்றேன். இவர்களது பேனா வலுவற்றதென நான் நம்புகின்றேன். உயிரூட்டமுடன் எழுதும் எழுத்தாளர்களை எண்ணிப் பாருங்கள்! அவர்கள் ஒரு அரசியல்வாதியாகவும் உள்ளனர். ஈழத்து எழுத்தாளரிலேயே பலரை உதாரணங்காட்ட முடியும். நாட்டை உயர்த்த, எழுத்தை உபயோகிப்பவர்களாயஎழுத்தாளர், அரசியலிலும்ஈடுபடும் போதே சாதாரண எழுத்தாளன் என்பதைவிடுத்து. இலட்சியவாதியாகவும்முடிகின்றது.

● எத்தனை வயதில் நீங்கள் எழுதஆரம்பித்தீர்கள்? எழுதுவதற்கு உங்களை உற்சாகப்படுத்தியவர் யார்?

பதினேழு வயதில் எனது முதல் கதை சுதந்திரனில் வெளியாயது. அந்த முதல் கதை பத்திரிகையில் வெளியானபின்பு உண்டாய உற்சாகமே அன்று அதிகம் எழுத ஊக்கமளித்தது. என்னை உற்சாகம் ஊட்டியவை சுதந்திரனும், ஈழகேசரியும் என்றே கூறவேண்டும். 'ஆனந்தன்' இதழில் வரதர் அவர்களுடன் இணையாசிரியராயிருந்தபோது, வரதர் அவர்கள் அளித்த உற்சாகம் எனக்கு மிகஉதவிற்று, இன்னுமொன்றைக் கூற ஆசைப்படுகிறேன். பாட நூல்கள் எழுதும் ஊக்கத்தை முதல் அளித்தவரும் வரதர் அவர்களே. அவரது ஊக்கத்தால் பத்துக்கு மேற்பட்ட நூல்கள் வெளியாகி கணிசமான அளவில் விற்பனையும் ஆகின்றன; ஊதியமும் கிடைக்கின்றது.

● 'காத'லைப்பற்றி ஒரே வசனத்தில் உங்கள் கருத்தைச் சொன்னால்?

மனைவியைக் காதலிக்கும் பேறு கொண்டவர்களுக்கே காதல் தெரியும்; புரியும்.

● தி.மு.க. தலைவர் அண்ணாத்துரையை உங்களுக்குப் பிடிக்குமல்லவா! அதுஅவருடைய எழுத்துத் திறமைக்காகவா, கொள்கைக்காகவா?

அண்ணா பேச்சுலகில் தனித்துவமான புதுமையைப் புகுத்தியவர். தமிழுக்கு புது உயிரூட்டியவர். கொள்கைக்கு என வாழ்பவர். கொள்கையாளர் பலரை ஏற்படுத்தியவர். இவை என்னை அண்ணா தாசன் ஆக்கிற்று.

● 'தமிழரசு' என்று ஒரு பத்திரிகையை நடாத்தினீர்களல்லவா? அது எவ்வளவு காலம் நடந்தது?

ஒன்றரை ஆண்டுவரை வெளிவந்தது என ஞாபகம். ஆனால் வார இதழாகப் பதினேழு இதழ்கள் வெளிவந்திருக்க வேண்டும்.

● ஏன் அதை நிறுத்திவிட்டீர்கள்?

பணமின்மையே காரணம். பணவசதியுள்ளவர்களால் மட்டுமே, ஈழத்தில் நிலையான பத்திரிகையை நடாத்த முடியும்.

● மறுபடியும் அதைத் திரும்ப நடத்தும் உத்தேசம் உண்டா?

பணவசதி ஏற்பட்டால் நடாத்த ஆவலுண்டு,

● இலங்கையில் உங்களுக்குப் பிடித்தமான மூன்று எழுத்தாளர்கள் யார்? இதே மாதிரி இந்திய எழுத்தாளர் மூவர்?

மன்னிக்கவும், தமிழ்நாட்டு, எழுத்தாளர் மூவரை—ஆமாம்! என்னைக் கவர்ந்தவர்களைக் கூறமுடியும். இதோ அகிலன், மு. வரதராசனார், ஜெயகாந்தன்,

தமிழ்நாட்டு எழுத்தாளர் அளவிற்கு என்னைக் கவர்ந்த ஈழத்து எழுத்தாளர் யார்? ...... யார்? —ம்! பதில் கூற முடியவில்லையே!

● நீங்கள்ஒருதீவிரதமிழரசுவாதி என்பதை அறிவோம். தென்னிந்தியாவில் தி.மு.க. எழுத்தாளர் மண்டலம் ஒன்று உருவாகியிருப்பது போல், இலங்கையில் தமிழரசு எழுத்தாளர் மண்டலம் தோன்றாத காரணமென்ன?

அப்படியொரு மண்டலம் தோன்றினால் இன்றைய எழுத்தாளர்களில் அனேகர் 'தமிழரசு எழுத்தாளர் மண்டலத்துக்குள்' அடங்குவர் என்றுதான் நம்புகிறேன். தி.மு.க. தலைவர்கள் கதை, கட்டுரை, நாடகம் ஆகிய துறைகளில் முழுமூச்சாக ஈடுபடுபவர்கள். தமிழரசுத்தலைவர்கள் அப்படி ஈடுபடுவது கிடையாது. ஏன் ராசதுரை அவர்கள் கூட தற்போது எழுதுவதில்லை. இதனால்இலக்கியத்துறையில் தமிழரசு மண்டலம் குறிப்பிடத் தக்கதாக அமையவில்லை.

● உங்கள் வாழ்வில் மறக்க முடியாத எரு சம்பவம்?

என் மணியை — அதாவது மனைவியை கைப்பிடித்தநாள், ஏனெனில். அன்று தொடக்கம் வாழ்வில் நிறைவையும், அமைதியையும் நிறையக்காண்கின்றேன். அந்நாளின்பின்பு தானே அன்பரசியும் அன்பழகனும் ஆகிய இரு உயிர்ச்செல்வங்களும் மழலைபேசி வாழ்வை இனிக்கச் செய்கின்றார்கள்! ●

# காணிவல் நடாத்தும் பிசாசுகள்!

**கீழ் நாடுகளிலே மட்டுந்தான் பேய் பிசாசு என்ற மூட நம்பிக்கை இருக்கிறதென்று நினைக்கிறீர்களா? மேற்கு ஜேர்மனியில் நடைபெறும் இந்த முட்டாள் தனத்தைப் படித்துப் பாருங்கள்!**

மேற்கு ஜெர்மனியில் உள்ள கிராமப் புறங்களில் வசிக்கும் சில ஏழைப் பெண்களை சில கிராமவாசிகள் பிசாசு என்று கூறித் துன்புறுத்துகிறார்கள். பிசாசின்மீது நம்பிக்கையும் அதை ஓட்டுவதையே தொழிலாகக் கொண்டவர்களின் எண்ணிக்கையும் இங்குள்ள கிராமப் பகுதிகளில் வெகுவாகப் பரவி வருகிறதாம், சமீப வருடங்களில் பத்தாயிரத்துக்கதிகமான பேயகற்றுபவர்கள் இங்கு வந்து குடியேறி விட்டதாக ஜெர்மன் வைத்திய சங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

உடலில் ஏதாவது சுகயீனம் கண்டதும் தமது டாக்டர்களின் சிகிச்சையில் நம்பிக்கை குறைந்த நோயாளிகள் இந்தப் பிசாசகற்றுபவர்களிடம் செல்லுகிறார்கள். அவர்களது நோய்க்குக் காரணம் பிசாசின் கோளாறே என்று இந்தப் பிசாசோட்டுபவர்கள் அவர்களைநம்பவைத்து விடுகிறார்கள், கிராமத்திலுள்ள சில பெண்களைக் குறிப்பிட்டு அவர்களைச் சூனியக்காரி என்று இந்தப் பிசாசோட்டிகள் கூறுகிறார்கள், அநேகமாக அவ்விதம் குற்றம் சாட்டப்படும் பெண்கள் அவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளவர்களாகவே இருப்பர்.

ஒரு பிசாசோட்டி ஒருமுறை மடைபரப்பி மந்திரம் ஜெபித்துப் பிசாசை ஓட்டுவதற்குப் பத்துப் பவுனுக்கு அதிகமாக வசூல் செய்கிறான்.

ஜெர்மானிய பண்டைய இதிகாசத்தின்படி நாட்டிலுள்ள பிசாசுகளெல்லாம் வருடாவருடம் ஏப்பிரல் மாதம் முப்பதாம்திகதி ஒன்று கூடிக் காணிவல் நடத்துவதாக இவர்கள் நம்புகிறார்கள், இந்த இரவில் பேய் பிசாசுகளில் நம்பிக்கையுள்ள எந்த ஒருவனும் வீட்டைவிட்டு வெளியேறுவதில்லை. அப்படி வெளிக்கிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மலை உச்சியிலிருந்து இவர்கள் சேகரித்து வைத்திருக்கும் பரிசுத்த சாம்பரை தங்கள் பாதுகாப்பிற்காக எடுத்துச் செல்கின்றார்கள்.

சிலபகுதிகளில் ஏப்பிரல் மாதம் முப்பதாம் திகதி இரவில் கிராமத்திலுள்ள ஜனங்களெல்லாம் ஒன்றுகூடி உரத்துச் சத்தமிடுகிறார்கள், அப்படிச் சத்தமிடுவதால் பிசாசுகளைத் துரத்திவிடலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

தேவாலயங்களிலுள்ளமணிகள் எல்லாம் அந்த இரவில் சேர்ந்து ஒலிக்கும். பாத்திரங்களை எல்லாம் ஒன்றோடொன்றி மோதிச் சத்தம் கிளப்புவார்கள். இவர்களது ஆர்ப்பாட்டங்களைக்கண்டு நாய்கள் குரைக்கும், குழந்தைகள் வீறிட்டு அலறும். ஆனால் அவர்கள் நினைக்கிறார்கள், இவையெல்லாமே பிசாசின் சேட்டை என்று! இந்தச் சந்தர்ப்பத்தில் சூனியக்காரிகள் என்று பேய் அகற்றுபவர்களால் பழிசுமத்தப்பட்ட பெண்களை கிராம மக்கள் கூட்ட மாகச் சென்று அடித்து நொருக்கி விடுவது முண்டு!

## கண்ணதாசன் நடிக்கிறார்!

கவிஞர் கண்ணதாசன் பாடல்தான் எழுதுகிறாரே, நடிக்கவும் செய்கிறாராஎன்று நீங்கள்கேட்கலாம். பல படங்களிலும், சிலநாடகங்களிலும் அவர் சிறுவேடங்கள் தாங்கிநடித்திருக்கிறார்.

இப்போது ஒரு நாடகத்தில் அவர் நடிக்கவிருக்கிறார். சென்னை துறைமுகத் தொழிலாளர்கள் நடத்தும் நாடகத்தில் கண்ணதாசன் நடிக்கப்போகிறார்!

# சிரித்துப் பாருங்கள்!

### "உங்கப்பன் மவனே!'

ஒரு பையன்: நான் கண்களை மூடிக்கொண்டு என்னுடைய பெயரை எழுதுவேன் பார்க்கிறாயா?

மற்றவன்: நீ எழுதுவாய்! உன்னுடையஅப்பாகண்ணை மூடிக்கொண்டு பரீட்சைத் தாளில் 'மாக்ஸ்' போடுவார்; நீ அவருடைய மகன்தானே?

—எஸ். கந்தசாமி,
பொகவந்தலாவை

※ ※

### உண்மைக்காதல்;

விற்பனையாளர்: — வாழ்த்துக் 'காட்' தானே! எம்மிடமிருக்கிறது. இதோ பாருங்கள்! இதிலுள்ள வாசகம் கருத்துள்ளது. "என் வாழ்க்கையில்" நான் காதலித்த ஓரேயொரு பெண்ணுக்கு"

வாலிபன்: அதுதான் எனக்கு வேண்டும். அதில் பன்னிரண்டு 'கார்ட்'டுகள் கட்டித் தாருங்கள்.

ம, தில்லையம்பலம்,
பருத்தித்துறை

※ ※

### எது பொய்?

ஒருவன்: உன் மனைவிக்கு அவருடைய மாமனார் ஏராளமான சொத்தை எழுதிவைத்துச் செத்துப்போனதால் தான் நீ அவளை மணந்து கொண்டாயாமே?

மற்றவன்: அது வெறும் பொய்......... ...அவளுடைய மாமனாரில்லாமல் வேறு யார் தான் அதை எழுதி வைத்திருந்தாலும் நான் அவளை மணந்துதானிருப்பேன்!

வ. நடராச, திருமலை.

※ ※

### வாத்தியார்சங்கீதம்

சலவைத்தொழிலாளி: (பாடசாலைப் பிள்ளைகளிடம்) தம்பிமார் வர்ர வழியில் என் கழுதையைக் கண்டீர்களா?

ஒருமாணவன்: உன் கழுதை யா? அது நம்ம சங்கீத வாத்தியார் வீட்டுப் பக்கமாய் போயிருக்கும். அந்தப் பக்கத்தில்தான் போய்ப்பார்;

※ ※

### கனவிலும் கஞ்சன்!

கணவன்: அடியே உன் தம்பி ராத்திரிக் கனவில் வந்து ஒரு பத்துரூபா கேட்டான். நான் ஒரு ரூபாதான் இருக்கென்று கொடுத்தேன்.

மனைவி: உங்களுக்குக் கனவில் கூட அந்தக் கஞ்சப் புத்தி போகலியா? பத்து ரூபாவே கொடுத்திருக்கக் கூடாதா?

செ. மகேந்திரன்
சண்டிலிப்பாய்

### இது நிஜமா?

ஒருபேண்: நீ போட்டுக்கொண்டிருக்கிறாயேமுத்துமாலை, எவ்வளவு ஜோராயிருக்கிறது. இது நிஜ முத்தோ என்று எனக்குக் கடித்துப் பார்க்கவேண்டும் போல் ஆசையாயிருக்கிறது.

தோழி: அது சரி; நீ கடித்துப் பார்ப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால், உன் பல் நிஜப்பல்லாக இருக்கவேண்டுமே, அது நிஜப் பல் தானா?

எஸ். குமாரசாமி
வெலிக்கந்தை

※ ※

### ஓடமுடியாது!

"உங்கள் கம்பனி காஷியரைப் பார்த்தால் சகிக்கவில்லை. அவருடைய கன்னத்திலே கோரமான வெட்டுக் காயம். மூக்குச் சப்பை, ஒற்றைக் கண் குருடு.........வேறு ஆள் கிடைக்கவில்லையா?

"வேண்டுமென்றுதான் இவரைப் பொறுக்கி எடுத்திருக்கிறேன், ஆசாமி பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடிப் போனால் பொலீசில் அடையாளம் சொல்வது சுலபமல்லவா!"

மு. மகாலட்சுமி, கொழும்பு

## பார்க்கக் கூடாதா?

காசி. ஆனந்தன்.

முகம் வளைந்து நிலம் பார்க்க
முறுவல் வர..கை மறைக்க
நகங்கடித்து மெலிகின்றாள் ..
நான் அவளைப் பார்த்தேனும்!

படம் போட்டு நாள் குறித்து
பையனிடம் தூதனுப்பி
இடம் பார்த்து வந்த மகள்
எதுக்காக வந்தாளோ?

குளுகுளுக்க உணர்ச்சி வந்து
குசுகுசுக்க வெறியோடு
பளபளக்க வந்தவளைப்
பார்க்காமல் யார்விடுவர்?

வளைகின்றாள்! அசைகின்றாள்!
வகை வகையாய் எப்படியோ
குழைகின்றாள்! நெளிகின்றாள்!
குருட்டு விழி எனக்கில்லை!

பனி மலரே! பனி! மலரே!
பார்க்கவிடு! பார்க்கவிடு!
உணரவிடு! மறுப்புண்டேல்
உயிரை விடச் சொல்லிவிடு!

### சரியான விமர்சனம்!

ஸிங்க்ளேர் லூயிஸ் என்ற அமெரிக்க அறிஞர் நோபெல் பரிசு பெற்றவர். அவர் எழுதிய ஒரு புத்தகத்தில் ஒரு பகுதி மிகவும்ஆபாசமாக இருப்பதாகப் பலர் கண்டித்தார்கள். அவர் ஒரு சமயம் கப்பலில் போய்க்கொண்டிருந்த போது ஒரு கிழவி அந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். அந்தக் கிழவி ஆபாசம் என்று சொல்லப்பட்ட பகுதிக்கு முன்னுலுள்ள பகுதிகளை வாசித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். ஆபாசம் என்று சொல்லப்படும் பகுதிகளைப் படிக்கும் போது கிழவியின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்க விரும்பினார். கிழவியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

படித்துக் கொண்டே இருந்த கிழவி சட்டென்று எழுந்தாள். மிடுக்காகக் கப்பல் கிராதி ஓரத்திற்கு நடந்தாள். புத்தகத்தை வீசிக் கடலினுள் எறிந்துவிட்டு மெதுவாகத் திரும்பிநடந்தாள்!

# இத்தால்... சகலரும் அறிவது!

### தமக்கே இட்ட தீ!

திருகோணமலை இந்துக்கல்லூரி ஓர்பகுதிக் கட்டிடம் ஓலையால் வேயப்பட்டிருக்கிறது. இது சில நாட்களுக்கு முன் ஓர்விஷமச் செயலால் தீப்பற்றியது. அரசாங்கம் பின்பும் இக்கட்டிடத்தை ஓலையால் வேய்ந்தது. பின்னரும் அதேவிஷமக்காரர்கள் தீ இட்டனர். இதனால் முக்கால் வாசிக் கட்டிடம் எரிந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பாடசாலை மாணவர்கள் அச்சமயம் அதேபாடசாலையில் தங்கியிருந்ததால் கட்டிடம் முழுதும் எரியாமலும் தளபாடங்கள் நாசமாகாமலும் காப்பாற்றப் பட்டது. இவ்விஷமச் செயலைச் செய்தவர்கள் தம்பிள்ளைகள்தான் கஷ்டப்படுவார்கள் அரசாங்கம் எவ்வித நஷ்டமும் அடையவில்லையென்பதை உணர்வார்களா?

திருமலை, — திருமலைராஜ்.

### ஓரே கேள்வி!

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியில் உள்ள புத்த விகாரையில் 68 தமிழ் (எஸ். எஸ். ஸி. சித்தியெய்திய) மாணவ மாணவிகள் சிங்களம் பயிலுகிறார்கள். இவர்களது தராதரத்தில் உள்ள நான் இவர்களைப் பார்த்து ஒருகேள்வி: தனிச்சிங்கள அரசாங்கத்தில் எல்லாப் பாடங்களையும் சிங்களத்தில் சித்தியெய்திய ஆயிரமாயிரமான சிங்கள மாணவர்கள் வேலையற்றிருக்கும் போது ஓரேஒரு சிங்களப்பாடம் படித்த உங்களுக்கு எப்படிவேலைகிடைக்கும்?

கந்தரோடை, — சு. கந்தசாமி

### உரிமை கிடைத்தால் சிங்களம் பயில்வோம்!

27–5–62 'புதினம்' இதழில் அரசாங்கமொழிபற்றிய கடிதம் ஒன்று கண்டேன். சிரிப்புத்தான் வந்தது. அரசாங்க மொழியை ஏற்றுக்கொள்ள நாம் மறுக்கவில்லையே! சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாக இருப்பதைத்தான் எதிர்க்கிறோம்.

நாங்கள் சிங்களம்படிக்கத்தயார். அரசாங்கமொழி என்பதற்காகவல்ல; அது அப்படி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது என்பதற்காகஅல்ல; நமது சகோதர மொழி என்பதற்காக! நம் தமிழுக்கு உரிய அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டபிறகு, எமது தேச மொழியை, நாம் பயிலத்தான் செய்வோம்.

வண்ணார்பண்ணை, — எஸ். சந்திரமனோகரன்.

### கா'தற்'கொலைகள்!

இப்போது சிலகாலமாக தினப்பத்திரிகைகளில் காதல் தற்கொலைகள் பற்றியசெய்திகள் அலங்காரமாக வெளியிடப் படுகின்றன. இத்தகைய செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாகி அவைகளைப் படிப்பதால் சிறு கஷ்டம் ஏற்பட்டவுடனேயே மனம் தற்கொலையை நாடிவிடுகின்றது. எனவே சமுதாயத்தின் நலனைக் கருதி இத்தகைய செய்திகளைப் பத்திரிகைளில் பிரசுரிக்காமல் விடவேண்டும் என்றுகோருகிறேன்.

வெள்ளவத்தை, — வா. குவேனி.

### பைந்தமிழ் படும்பாடு!

நாவலரும் பாவலரும் போற்றும் பைந்தமிழ் படும்பாட்டை எழுதித் தெளியவைக்கமுடியாது. சிறு, சிறு எழுத்துக்களில் தமிழ் கொலைசெய்யப் பட்டிருப்பதை யாரும் கவனிக்கமாட்டார். அனல் பெரிய கொட்டை எழுத்தில் அல்லவா கொலைசெய்து எழுதுகிறார்கள். உதாரணமாக, எட்டியாந் தோட்டைபஸ் நிலையத்தின் அருகாமையில் சீர்மைக் குடிவகை சாப்பு என்று பெரிய எழுத்தில் எழுதப்பெற்றிருக்கிறதே!

தெரணியகலை, — ரா. ராமையா.

Registered as a newspaper at the G. P. O

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

## தி. மு. க. வுக்கு தடையில்லை!

டெல்லியில் நடைபெற்ற 'இந்திய ஒருமைப்பாடு மாநா'ட்டு நிகழ்ச்சிகளின் முடிவாக பிரிவினைக் கட்சிகளுக்குத் தடை ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனல் அத்தகைய பிரச்சினை எதுவும் இல்லாமலே மாநாடு முடிவடைந்து விட்டது. இந்தியப் பிரிவினைக் கட்சிகளுக்குள் தி; மு. க. கட்சியே முக்கியமானது!

✲ மன்னன் பாண்டியன், கோவலனைக் கொலைக்களம் அனுப்பக் காரணம்:

● தனது துணைவியின் காற்சிலம்புக்கும் கண்ணகியின் காற்சிலம்புக்கும் வேறுபாடறியாது வெளித்தோற்றம கண்டு மயங்கியதே!

மாணிக்கப்பரல் நிறைந்த கண்ணகியின் காற்சிலம்புபோன்ற

சிறந்த ஆபரணங்களை

யாழ்ப்பாணம், 137, கஸ்தூரியார் வீதி

பீ. வி. எஸ். நாதன் அன் பிறதர்

நகைமாளிகையில் வாங்கிமகிழுங்கள்!

எர்:—(தமிழ்ச் செல்வன்) உ.இராமசாமி

ஜூன் 5 ஹர்த்தால்

# அரசாங்கத்துக்கு சவால்!

## தமிழ் மக்களின் வெறுப்புணர்ச்சி குறையவில்லை!

தமிழரசுக்கட்சி கேட்டுக் கொண்டதற்கிணங்க ஜூன் 5ம் திகதி வடக்கு கிழக்கு மாகாணங்களில் துக்கதினம் அனுட்டிக்கப் பட்டது. எதிர்பார்க்கப்பட்டதை விட மிக வெற்றிகரமாகவே இந்தஹர்த்தால் நடைபெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணப் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டதெனலாம் அன்றுமாலையில் நடைபெற்ற கறுப்புக்கொடி ஊர்வலமும் முற்றவெளியில் நடை பெற்ற மாபெரும் கூட்டமும், தமிழருக்கெதிராக அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கைகளினுல் தமிழ்மக்கள் எவ்வவளவு தூரம் வெறுப்படைந்திருக்கிருர்களென்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிற்று.

மன்னுர், திருகோணமலை' வவனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்புப் பகுதிகளிலும் ஹர்த்தால் அனுட்டிக்கப் பட்டிருக்கிறது. மட்டக்களப்பில் திரு. பூபாலபிள்ளை என்பவர் ஹர்த்தாலுக்கு எதிராகப்பிரசாரம் செய்தாரெனினும் அவரை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

''தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கி விட்டோம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அரசாங்கத்துக்கு இந்த ஹர்த்தால் ஒரு 'சவால்' மாதிரி அமைந்திருக்கிறது!" என்று ஒரு பேச்சாளர் குறிப்பிட்டார்,

### பொலீஸ் தாக்குதல் மக்கள் கொதிப்பு

இந்த ஹர்த்தால் தினத்தன்று பொலீஸ் நிலையத்துக்கு அலுவலின் நிமித்தம் சென்ற பாராளுமன்றப் பிரதிநிதி டாக்டர் நாகநாதன் அங்கிருந்த ஒரு பொலீசாரால் தாக்கப்பட்ட சம்பவம் மக்களிடையே மிகுத பரபரப்பையும் மனக் கொதிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கவர்ச்சிகரமான

புளொக்குகள்

செய்வதற்கு சிறந்த இடம்

Sri Lanka Block Makers

131, Messenger, Street, COLOMBO.

"ஆ... ஐயோ,

தலைவலி!.. தலைவலி!

இதைப்போக்கமருந்தே இல்லையா?''

'யார் சொன்னது?




இதோ இருக்கிறதே,

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்"

விலை ரூபா 3-00 (தபாற் செலவு சதம் 95)

வேறு நோய்களையும் இது குணமாக்குகிறது. அவற்றின் விபரமறிய இமைாக அனுப்பப்படும் 52 பக்கங்கள் உள்ள கேட்லாக்கைப் பாருங்கள்.

ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு.

இலங்கை எங்கிலும் இணையற்று விளங்கும்

ஒரே ஒரு பீடி

ராஜ பீடி ஸ்பெஷல்

இன்றே இப்பொழுதே

ராஜ பீடி ஸ்பெஷல்

உபயோகியுங்கள்!

ராஜபீடி கம்பெனி

கொழும்பு. போன்: 2739

'மில்க்வைற் நீல சோப்'

ஒன்றே

உங்கள் சலவை வேலையைபூர்த்தி செய்கிறது.




இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி; அச்சகம்,